தினமணி

**இன்றைய வேளாண் செய்திகள்**

## வேளாண் பயிர்க் காப்பீட்டு திட்டத்தால் விவசாயிகளுக்கு பாதிப்பு: பிரதமருக்கு முதல்வர் ஜெயலலிதா கடிதம்



திருத்தியமைக்கப்பட்ட வேளாண் பயிர்க் காப்பீட்டுத் திட்டத்தால் விவசாயிகளுக்குப் பாதிப்பு ஏற்படும். இதனால் பெரும்பாலான விவசாயிகள் பயிர்க் காப்பீடு செய்ய முன்வருவது சந்தேகமே என முதல்வர் ஜெயலலிதா தெரிவித்துள்ளார்.

இது குறித்து பிரதமர் மன்மோகன் சிங்குக்கு அவர் எழுதிய கடிதத்தின் விவரம்:

தேசிய வேளாண் காப்பீட்டுத் திட்டத்தை திரும்பப் பெற்றுக் கொண்டு, திருத்தப்பட்ட தேசிய வேளாண் காப்பீட்டுத் திட்டத்தை கொண்டு வர மத்திய அரசு திடீரென முடிவு செய்துள்ளது.

நடப்பாண்டில் ராபி பருவத்தில் இருந்து திருத்தப்பட்ட தேசிய பயிர் பாதுகாப்புத் திட்டத்தை, மாநிலங்களுடன் ஆலோசிக்காமல் மத்திய அரசு கொண்டு வந்திருப்பது விவசாயிகளுக்கு கடும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

தமிழகத்தில் பயிர் காப்பீட்டுத் திட்டத்தில் இணைவதற்கு விவசாயிகளை ஊக்குவிக்க பல்வேறு நடவடிக்கைகளை எனது தலைமையிலான அரசு எடுத்து வருகிறது.

விவசாயிகளுக்கு மாநில அரசு 45 முதல் 50 சதவீதம் வரையிலான பயிர் இழப்பு காப்பீட்டுக்கான பிரீமியத் தொகையைச் செலுத்தி வருகிறது. மேலும் பயிர் இழப்பில் 50 சதவீதத் தொகையை மத்திய அரசுடன் இணைந்து வழங்கி வருகிறது.

இந்நிலையில் புதிய பயிர் பாதுகாப்புத் திட்டத்தின்படி பிரிமீயம் தொகையை மத்திய அரசு கடுமையாக உயர்த்தியிருப்பது விவசாயிகளுக்கு கூடுதல் நிதி சுமையை ஏற்படுத்தும்.

இந்திய விவசாயம் பெரும்பாலும் பருவமழைகளை சார்ந்தே இருக்கிறது. வானிலையில் மாற்றங்கள் ஏற்பட்டு விவசாயம் பாதிக்கப்படும்போது பயிர் பாதுகாப்புத் திட்டமே லட்சக்கணக்கான விவசாயிகளுக்கு உதவுவதாக உள்ளது.

எனவே எனது தலைமையிலான அரசு, அதிக விவசாயிகளை பயிர் பாதுகாப்புத் திட்டத்தில் பதிவு செய்ய வைத்து, மாநில அரசு வழங்கும் 50 சதவீதம் பிரிமீயத்தை மானியமாக பெற அனைத்து முயற்சிகளையும் மேற்கொண்டுள்ளது.

ஆனால் தேசிய வேளாண் காப்பீட்டுத் திட்டத்தின் கீழ் மத்திய அரசால் வெறும் 5 சதவீத மானியம் சிறு விவசாயிகளுக்கு மட்டும் வழங்கப்படுகிறது.

விவசாயிகளின் எண்ணிக்கை அதிகரிப்பு: 2000-2001-ஆம் ஆண்டில் தேசிய வேளாண் காப்பீட்டுத் திட்டத்தில் பதிவு செய்திருந்த விவசாயிகளின் எண்ணிக்கை 1.01 லட்சம். இது கடந்த நிதியாண்டில் (201213) 9.76 லட்சம் விவசாயிகளாக அதிகரித்துள்ளது. இதற்கு தமிழக அரசு வழங்கும் கூடுதல் மானியமே காரணம்.

மாநில அரசுகளுடன் எந்த விதத்திலும் கலந்து ஆலோசிக்காமல் தேசிய பயிர் பாதுகாப்புத் திட்டத்தை மத்திய அரசு அறிவித்துள்ளது.

தற்போதைய சாகுபடிக்கான பயிர் பாதுகாப்புத் திட்டத்தின் அறிவிப்பு, கடந்த ஆண்டு நவம்பர் 1-ஆம் தேதிதான் வெளியிடப்பட்டது. அதாவது ராபி பருவ சாகுபடி தொடங்கிய ஒரு மாதம் கழித்து அந்த திட்டம் அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்த தேசிய பயிர் பாதுகாப்பு திட்டம் மீது மாநில அரசுகளுக்கும், லட்சக்கணக்கான விவசாயிகளுக்கும் நம்பிக்கை ஏற்படவில்லை. மேலும் இத்திட்டத்தால் தமிழக விவசாயிகளுக்கு நிதிச் சுமை அதிகரித்துள்ளது.

பருவநிலை மற்றும் பயிரை அடிப்படையாகக் கொண்டு, தேசிய வேளாண் காப்பீட்டுத் திட்டத்தின்படி பிரிமீயம் அளவு 2 முதல் 3.5 சதவீதமாக நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

தமிழக அரசு 50 சதவீதம் வரை பிரிமீயம் மானியத்தை அளிப்பதால் தமிழக விவசாயிகள் 1 முதல் 1.75 சதவீதம் வரையே பிரிமீயம் அளவு செலுத்துகிறார்கள்.

பிரீமியத் தொகை உயரும்: புதிய பயிர் பாதுகாப்புத் திட்டத்தின்படி விவசாயிகள் செலுத்த வேண்டிய பிரிமீயம் தொகை அதிகரித்துள்ளது. அதாவது பயிர்க் காப்பீட்டுக்கான பிரீமியம் 3.75 சதவீதம் மற்றும் அதற்கு அதிகமாகவும், வானிலை சார்ந்த பயிர்க் காப்பீட்டுக்கான பிரீமியம் 4.8 சதவீதம் மற்றும் அதற்கு அதிகமாகவும் உயர்த்தப்பட்டுள்ளது.

இந்த அளவுக்கு அதிகமான பிரிமீயம் தொகை நிர்ணயித்தால், விவசாயிகள் தங்கள் பயிரை காப்பீடு செய்ய முன் வருவார்களா என்பது சந்தேகம்தான். எனவே பயிர்பாதுகாப்புத் திட்டத்தை மாற்றக்கூடாது.

தமிழ்நாட்டு விவசாயிகள் ஏற்கனவே கடந்த நிதியாண்டில் ஏற்பட்ட கடும் வறட்சி காரணமாக பாதிக்கப்பட்டுள்ளனர். இந்த ஆண்டு வடகிழக்கு பருவமழையும் போதிய அளவே பெய்திருப்பதால், தமிழக விவசாயிகள் மேலும் துன்பத்துக்குள்ளாகி இருக்கிறார்கள்.

எனது யோசனை: பயிர் காப்பீட்டுக்கு அதிக பிரிமீயம் நிர்ணயித்திருப்பது விவசாயிகளுக்கு கடும் பாதிப்பை ஏற்படுத்தும். இத்தகைய நிலையை எனது தலைமையிலான அரசால் முழுமையாக ஏற்றுக் கொள்ள இயலாது.

எனவே தேசிய பயிர் பாதுகாப்புத் திட்டத்தின்படி விவசாயிகள் மீது சுமத்தப்பட்டுள்ள 2 மற்றும் அதற்கு அதிகமான பிரிமீயம் நிதிச் சுமையை மாநில அரசும், மத்திய அரசும் சமமாக ஏற்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அந்த 2 சதவீத பிரிமீயம் நிதிச்சுமையை எக்காரணம் கொண்டும் விவசாயிகள் மீது சுமத்தக் கூடாது.

அப்படி செய்தால்தான் அதிக விவசாயிகளை பயிர் பாதுகாப்புக் காப்பீட்டுக்கு நாம் உற்சாகப்படுத்த முடியும்.

மேலும் விவசாயிகளும் பயிர் இழப்பை சமாளித்து, வழக்கமான தங்கள் விவசாயப் பணிகளை நல்ல முறையில் மேற்கொள்ள வழி வகுக்கும்.

எனவே தாங்கள் இந்த விஷயத்தில் தனிப்பட்ட முறையில் தலையிட்டு, தேசிய பயிர் பாதுகாப்புத் திட்ட பிரிமீயம் தொகையை மத்திய, மாநில அரசுகள் சமமாக பகிர்ந்து கொள்ள வேண்டும் என்ற என் கோரிக்கை மீது விரைவான முடிவு எடுக்க கேட்டுக்கொள்கிறேன்.

## ஒருபோக சாகுபடிக்கு தண்ணீர்தலைமைச் செயலர் மீது நீதிமன்ற அவமதிப்பு மனுத் தாக்கல்

மேலூர் ஒருபோக சாகுபடிக்கு தண்ணீர் திறப்பது குறித்து நீதிமன்ற உத்தரவின்படி அவசர ஆலோசனைக் கூட்டம் நடத்தாத தலைமைச் செயலர்  மீது நீதிமன்ற அவமதிப்பு நடவடிக்கை கோரி மனுத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

மேலூரைச் சேர்ந்த வழக்குரைஞர் எஸ்.திருமேனி இந்த மனுவைத் தாக்கல் செய்துள்ளார்.

மனு விவரம்: வைகை அணையில் இருந்து மேலூர் ஒருபோக சாகுபடிக்கு தண்ணீர் திறக்குமாறு டிச.27-ல் உயர் நீதிமன்றத்தில் மனுத் தாக்கல் செய்திருந்தேன். மனுவை விசாரித்த நீதிமன்றம், இதுதொடர்பாக பொதுப்பணித் துறை, விவசாயம் உள்ளிட்ட துறை செயலர்களுடன் ஜனவரி 4-ம் தேதி (சனிக்கிழமை) அவசர கூட்டம் நடத்தி  முடிவு செய்யுமாறு தமிழக அரசின் தலைமைச் செயலருக்கு உத்தரவிட்டது.

பெரியாறு மற்றும் வைகை அணைகளில் குடிநீருக்கு போக மீதமுள்ள நீரை கணக்கில் எடுத்து மேலூருக்கு திறக்க வேண்டிய நீரின் அளவை நிர்ணயிக்குமாறு அதில் குறிப்பிடப்பட்டிருந்தது. இவ் விஷயத்தில் அதிகாரிகள் இரு வேறு பகுதி ஆயக்கட்டுதாரர்கள் இடையே பாரபட்சம் காட்டக் கூடாது எனவும் குறிப்பிடப்பட்டிருந்தது.

ஆனால், நீதிமன்ற உத்தரவுப்படி ஜன.4-ம் தேதி தலைமைச் செயலர் அவசர கூட்டத்தை நடத்தவில்லை.

எனவே, நீதிமன்ற உத்தரவை மதித்து நடக்காத தலைமைச் செயலர் மீது நீதிமன்ற அவமதிப்புக்கான தண்டனை வழங்க வேண்டும் என மனுவில் குறிப்பிடப்பட்டுள்ளது. இந்த மனு, நீதிபதிகள் ஆர்.சுதாகர், எம். வேலுமணி ஆகியோர் அடங்கிய அமர்வு முன் திங்கள்கிழமை விசாரணைக்கு வந்தது. அப்போது அரசு சார்பில் ஆஜரான கூடுதல் தலைமை வழக்குரைஞர் செல்லப்பாண்டியன், கூட்டம் நடத்துவது குறித்து அரசிடம் இருந்து தனக்கு தகவல் ஏதும் வரவில்லை எனத் தெரிவித்தார். இதையடுத்து, விசாரண செவ்வாய்க்கிழமைக்கு ஒத்திவைக்கப்பட்டது.

### வரத்து அதிகரிப்பால் மக்காச்சோளம் விலை சரிவு

ஆந்திரா மற்றும் கர்நாடகாவில் இருந்து மக்காச்சோளம் வரத்து அதிகரித்துள்ளதால் தமிழக மக்காச்சோளத்தின் விலை குறைந்து உள்ளது.

தமிழகத்தில் தேனி, திண்டுக்கல், பெரம்பலூர், நாமக்கல் மாவட்டங்களில் அதிக அளவில் மக்காச்சோளம் பயிரிடப்படுகிறது. இந்த ஆண்டு வடகிழக்கு பருவமழை பொய்த்துப் போனதால் விளைச்சல் குறைந்து விட்டது. ஆழ்குழாய் கிணற்று நீரை வைத்து சில பகுதிகளில் மக்காச்சோளம் சாகுபடி செய்யப்பட்டது. கடந்த ஆண்டு (100 கிலோ) ஒரு மூடை மக்காச்சோளம் ரூ.1400 வரை விற்பனையானது. ஆனால் இந்த ஆண்டு ஆந்திரா, கர்நாடகாவில் இருந்து கோழிப் பண்ணைகளுக்கு மக்காச்சோளம் வரவழைக்கப்படுகிறது. இதனால் விலை குறைந்துள்ளது. இந்த ஆண்டு தண்ணீர் பாய்ந்த மக்காச்சோளத்தின் விலை ஒரு மூடை ரூ.1150-க்கே விற்பனையாகிறது. மேலும் போதிய மழை இன்றி பாதி விளைச்சல் அடைந்த

மக்காச்சோளத்தை வாங்க யாரும் முன்வரவில்லை. இதனால் விவசாயிகள் மக்காச்சோளத்தை மாடு, கோழிகளுக்கு தீவனமாக பயன்படுத்த தொடங்கி விட்டனர். இது குறித்து அம்பிளிக்கையைச் சேர்ந்த விவசாயி ஜானகிராமன் கூறியதாவது: நான் 5 ஏக்கரில் மக்காச்சோளம் பயிரிட்டேன். போதிய மழை இல்லாததால் விளைச்சல் பாதியாக குறைந்து விட்டது. விலையும் கிடைக்கவில்லை. எனவே விளைந்த மக்காச்சோளத்தை கறவை மாடுகளுக்கு கொடுக்க வைத்து கொண்டேன் என்றார்.

### கொள்முதல் விலையை உயர்த்த கரும்பு விவசாயிகள் கோரிக்கை

கரும்பு கொள்முதல் விலையை ரூ.3,750 ஆக உயர்த்தி அரசு அறிவிக்க வேண்டும் என்று கரும்பு விவசாயிகள் சார்பில் தேனி மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் திங்கள்கிழமை மனு அளிக்கப்பட்டது.

கீழக்கூடலூர் பகுதியைச் சேர்ந்த கரும்பு விவசாயிகள், மாவட்ட வருவாய் அலுவலர் சீ.சோமுபாண்டியனிடம் அளித்த மனு விவரம்: கீழக்கூடலூர் பகுதியில் 80 ஹெக்டேருக்கும் மேல் கரும்பு விவசாயம் நடைபெறுகிறது. கரும்பு விவசாயத்துக்கு ஏக்கர் ஒன்றுக்கு ரூ.ஒரு லட்சத்து 4,300 உற்பத்தி செலவு ஏற்படுகிறது. ஒரு ஏக்கருக்கு 30 டன்னுக்கும் குறைவாக மகசூல் கிடைக்கிறது. இந்த நிலையில், அரசு கரும்பு டன் ஒன்றுக்கு ரூ.2,650 கொள்முதல் விலை நிர்ணயம் செய்துள்ளதால், ஒரு ஏக்கர் கரும்புக்கு ரூ.79 ஆயிரத்து 500 தான் கிடைக்கிறது.

மேலும், கரும்பு சாகுபடிக்கு மானிய விலையில் உரம் மற்றும் பூச்சி மருந்துகள் போதிய அளவு வழங்கப்படுவதில்லை. உற்பத்தி செலவுக்கு கட்டுபடியாகாத கொள்முதல் விலை நிர்ணயத்தால், கரும்பு சாகுபடியில் நஷ்டம் ஏற்பட்டு விவசாயத்தை கைவிட வேண்டிய நிலை உள்ளது. நலிவடைந்த கரும்பு விவசாயிகளின் நலன் கருதி, கரும்பு கொள்முதல் விலையை டன் ஒன்றுக்கு ரூ.3,750 ஆக உயர்த்தி அரசு அறிவிக்க வேண்டும். மானிய விலையில் உரம் மற்றும் பூச்சி மருந்துகள் தட்டுப்பாடின்றி கிடைக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று மனுவில் தெரிவித்துள்ளனர்.

### ரூ.3,268 கோடி விவசாயக் கடன்: ஆட்சியர் தகவல்

தேனி மாவட்டத்தில் 2014-15-ம் ஆண்டு நபார்டு வங்கித் திட்டத்தின் கீழ் விவசாயிகளுக்கு ரூ.3,268 கோடி கடன் வழங்க இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது என்று மாவட்ட ஆட்சியர் கே.எஸ். பழனிசாமி கூறினார்.

தேனியில் வங்கிப் பணிகள் வளர்ச்சி குறித்த ஆய்வுக் கூட்டம் மாவட்ட ஆட்சியர் கே.எஸ். பழனிசாமி தலைமையில் நடைபெற்றது. நபார்டு வங்கி வளர்ச்சி மேலாளர் வெங்கடரமணா, ரிசர்வ் வங்கி உதவிப் பொது மேலாளர் கந்தசாமி, மாவட்ட முன்னோடி வங்கி மேலாளர் பாலகிருஷ்ணன் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

வங்கிப் பணிகள் குறித்த 2014-15-ம் ஆண்டுக்கான திட்ட அறிக்கையை வெளியிட்டு ஆட்சியர் கூறியது: மாவட்டத்தில் 2014-15-ம் நிதியாண்டில் நபார்டு வங்கித் திட்டத்தின் கீழ் விவசாயிகளுக்கு பயிர் கடன், வேளாண்மை சார்ந்த நீண்ட கால கடன், வேளாண்மை சாரா தொழில் கடன் மற்றும் இதர முன்னுரிமை கடன் வழங்க கடந்த நிதியாண்டை விட 20 சதவிகிதம் அதிகமாக ரூ.3,268 கோடி இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது என்றார்.

### கோமாரி நோயால் கேரளாவில் தடை அடிமாடுகளை பராமரிக்காத 2 பேர் கைது

கோமாரி நோய் பாதிப்பை தொடர்ந்து, தமிழக அடிமாடுகளுக்கு கேரள அரசு தடை விதித்துள்ளதால், கம்பத்தில் ஆயிரக்கணக்கான அடிமாடுகள் விற்பனைக்கு கொண்டு செல்லமுடியாமல் தேக்கம் அடைந்துள்ளன. இந்த மாடுகளுக்கு தீவனம் வழங்கி முறையாக பராமரிக்கவில்லையென பிராணிகள் வதை தடுப்பு பிரிவினர் திங்கள்கிழமை கொடுத்த புகாரில் 2 பேரை வடக்கு போலீஸார் கைது செய்தனர்.

தமிழகத்தில் பல்வேறு மாவட்டங்களில் கால்நடைகளுக்கு கோமாரி நோய் தாக்கியது. இதன் காரணமாக தமிழகத்திலிருந்து அடிமாடுகள் கொண்டு வர கேரள அரசு  தடை விதித்தது. ஆந்திரா மற்றும் தமிழகத்தின் பல்வேறு மாவட்டங்களில் இருந்து, கேரளாவுக்கு மாடுகளைக் கொண்டு செல்வதற்கு முன்பு, தேனி மாவட்டம் கம்பத்தில் கால்நடை மருத்துவக் குழுவினர், பரிசோதனை செய்வார்கள்.

அவர்களின் சான்றிதழ் பெறப்பட்ட பின்னரே அடிமாடுகள் லாரிகளில் கேரளாவுக்கு கொண்டு செல்லப்படும். தற்போது, மருத்துவ சான்றிதழ் பெறப்பட்ட ஆரோக்கியமான அடிமாடுகளையும் கொண்டு செல்வதற்கு கேரளா தடை விதித்துள்ளது. இதனால் கம்பம் பகுதியில் பல ஆயிரக்கணக்கான அடிமாடுகள் தேங்கி, விற்பனை செய்யமுடியாத சூழ்நிலை ஏற்பட்டுள்ளது.

இந்நிலையில், பிராணிகள் வதை தடுப்பு பிரிவினர் சார்பில், ஜோஷின் அந்தோணி தலைமையிலான குழு, கம்பம் ஏழரசு களத்தில் அடிமாடுகளை ஆய்வு செய்தனர். இதில், அடிமாடுகளை முறையாக பராமரிக்கவில்லை, தீவனங்கள், தண்ணீர் கொடுக்கவில்லை, மருத்துவ வசதியில்லையென்று என வடக்கு காவல் நிலையத்தில் புகார் தெரிவித்தனர்.

புகாரின் அடிப்படையில், போலீஸார் வழக்குப் பதிந்து அடிமாடு வியாபாரிகளான கம்பம் சுக்காகல்பட்டியைச் சேர்ந்த காளந்துரை(55), உலகத்தேவர் தெருவைச் சேர்ந்த கணபதி(50) ஆகியோரை கைது செய்தனர். 21 மாடுகளையும் மீட்டுள்ளனர். மேலும், அடிமாடு வியாபாரிகள், பிராணிகள் வதை தடுப்புப் பிரிவினரை மிரட்டியதாக திங்கள்கிழமை மதியம் கொடுத்த புகாரின் மீதும் வழக்குப் பதிவு செய்யப்பட்டுள்ளது.

**பயிர் காப்பீட்டு இழப்பீடு தொகை வழங்கக்கோரி திமுக உண்ணாவிரதம்**

திருவாடானை தாலுகா முழுவதும் பயிர் காப்பீட்டு இழப்பீடு தொகை வழங்கக் கோரி ஆர்.எஸ். மங்கலம் ஒன்றிய திமுக செயலர் நல்ல சேதுபதி தலைமையில் 500-க்கும் மேற்பட்டோர் உண்ணாவிரதம் இருந்தனர்.

திருவாடானை தாலுகாவில் கடந்த ஆண்டு சம்பா பருவத்தில் பருவ மழை பொய்த்து விட்டதால் கடும் வறட்சி ஏற்பட்டது.

கடந்த ஆண்டு விவசாயிகள் பயிர் காப்பீடு செய்தும், இதுவரை இழப்பீடு தொகையை வழங்க வில்லை.

இந்த தொகையை வழங்கக் கோரி ஆர்.எஸ். மங்கலம் ஒன்றிய செயலர் நல்லசேதுபதி தலைமையில் தாலுகா அலுவலகம் முன் திங்கள்கிழமை

உண்ணாவிரதம் நடைபெற்றது. நடப்பு சம்பா பருவத்தில் பருவ மழை பொய்த்து விட்டதால் கடும் வறட்சி ஏற்பட்டுள்ளது. இந்த ஆண்டும் விவசாயிகள் பயிர் காப்பீடு தொகை செலுத்தியுள்ளனர்.

எனவே திருவாடானை தாலுகாவை வறட்சி தாலுகாவாக அறிவிக்கக் கோரியும், நூறு நாள் வேலை திட்டத்தை 200 நாள் வேலையாக அறிவிக்கக் கோரியும் மற்றும் பல்வேறு கோரிக்கைகளை வலியுறுத்தி உண்ணாவிரதம் நடைபெற்றது. இதில் ராசு, ராஜதுரை,கே.ஆர். நாகநாதன், ஆதினமிளகி, ராகூல், ராஜேந்திரன், ராதானூர் நாகநாதன் மற்றும் 500-க்கும் மேற்பட்டோர் உண்ணாவிரதத்தில் கலந்து கொண்டனர்.

### பவானிசாகர் அணை நீர்மட்டம் 49 அடியாக சரிவு

பவானிசாகர் அணையின் நீர்மட்டம் 49 அடியாக சரிந்துவிட்டதால், அணையில் மீன்பிடிப்பு 2 டன்னாக அதிகரித்துள்ளது.

சத்தியமங்கலம், கோபி,பவானி உள்ளிட்ட ஈரோடு மாவட்டத்தின் முக்கிய நீராதாரமாக பவானிசாகர் அணை உள்ளது. அணையின் நீர்மட்ட கொள்ளளவு 120 அடி. இதில் 15 அடி சேறும் சகதியுமாக உள்ளது. நடப்பாண்டு பருவமழை பொய்துவிட்டதால், அணையின் நீர்மட்டம் வெகுவாகக் குறைந்து திங்கள்கிழமை நிலவரப்படி 49 அடியாக சரிந்துவிட்டது.

அணையில் இருந்து பாசனத்துக்கு பவானிஆற்று மதகு மூலம் 900 கனஅடி நீரும், கால்வாய் மூலம் 2,300 கனஅடி நீரும் திறந்துவிடப்படுகிறது. அணைக்கு நீர்வரத்து முற்றிலும் பாதிக்கப்பட்டு 61 கனஅடியாக உள்ளது.

பவானிசாகர் அணையில் தமிழ்நாடு மீன்வளர்ச்சி கழகம் சார்பில் மீன்பிடி உரிமம் தனியாருக்கு குத்தகைக்கு விடப்பட்டுள்ளது. அணையில் 30 லட்சம் மீன் குஞ்சுகள் இருப்பு உள்ளன. இதை தவிர, தானாக உற்பத்தியாகும் மீன்குஞ்சுகளும் உண்டு. இங்கு ரோகு, மிருகால், கட்லா, ஜிலேபி, சொட்டவாளை, சோலைசொட்டு போன்ற வகை மீன்கள் அணையில் உள்ளன.

கடந்த மே மாதம் அணையின் நீர்மட்டம் 29 அடியாக சரிந்தபோது, மீன்கள் சுவாசிப்பதற்கு போது பிராணவாயு இல்லாமல் திணறும் அபாயம் ஏற்பட்டது. அதைத் தொடர்ந்து, லட்சக்கணக்கான மீன்கள் உயிரிழக்கும் அபாயம் உருவானது. எனவே, அப்போதே 70 சதவீதம் மீன்கள் பிடிக்கப்பட்டுவிட்டன. இதனால் அணையில் மீன் உற்பத்தி குறைவாகவே இருந்தது.

அதன்பிறகு, ஜூன் மாத துவக்கத்தில் பெய்த மழையாலும் பில்லூர் அணையில் இருந்து வந்த புதுவரவு நீரினாலும் அணையில் மீன்பிடிப்பு நடைபெறவில்லை. அதைத் தொடர்ந்து, அணையில் லட்சக்கணக்கான மீன்குஞ்சுகள் விடப்பட்டு வளர்க்கப்பட்டன. அவை தற்போது 5 கிலோ எடை கொண்ட மீன்களாக வளர்ச்சி அடைந்துள்ளன. மீன்கள் தின்பதற்குரிய பருவம் அடைந்துள்ளதால், கட்லா, மிருகு, ரோகு போன்றவை அதிகளவில் பிடிக்கப்படுகின்றன. அணையில் மீன்பிடிப்பு பணியில் 20-க்கும் மேற்பட்ட மீனவர்கள் ஈடுபட்டு வருகின்றனர். கடந்த சில மாதங்களாக 1 டன்னாக இருந்த மீன்வரத்து  தற்போது, 2 டன்னாகவும் அதிகரித்துள்ளது. மார்கழி மாதம் என்பதால் மீன்விற்பனை மந்தமாக உள்ளது. முதல்தர மீன் கிலோ ரூ.80-க்கும் இரண்டாம் தரம் கிலோ ரூ.60-க்கும் விற்கப்படுகிறது.அணைப் பகுதியில் பிடிக்கப்படும் மீன்கள் அதே இடத்தில் ரக வாரியாக பிரித்து எடை போடுகின்றனர். அதன்பின், பிளாஸ்டிக் கூடையில் மீன்களை அடுக்கி ஐஸ்கட்டியால் பதப்படுத்தி, வேன் மூலம் விற்பனைக்கு மீனவர்கள் அனுப்பி வைத்தனர்.

## மஞ்சளுக்கு அதிக விலை: விவசாயிகள் மகிழ்ச்சி

திருச்செங்கோடு வேளாண்  உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனைச் சங்கத்தில் சனிக்கிழமை நடைபெற்ற ஏலத்தில் மஞ்சளுக்கு அதிக விலை கிடைத்தது.

இந்தச் சங்கத்துக்கு 850 மூட்டை மஞ்சள் விற்பனைக்கு வந்தது. ஆத்தூர், கெங்கவல்லி, கூகையூர், கள்ளக்குறிச்சி, பொம்மிடி, அரூர், ஜேடர்பாளையம், பரமத்திவேலூர், நாமக்கல், மேட்டூர், பூலாம்பட்டி ஆகிய பகுதிகளைச் சேர்ந்த விவசாயிகள் மஞ்சளைக் கொண்டு வந்திருந்தனர். கடந்த வாரம் 750 மூட்டைகள் மட்டுமே விற்பனைக்கு வந்தன.

மஞ்சளை வாங்க ஈரோடு, ராசிபுரம், நாமகிரிப்பேட்டை, சேலம் ஆகிய ஊர்களிலிருந்து 25-க்கும் மேற்பட்ட வணிகர்கள் வந்திருந்தனர். ஏலம் மூலம் ரூ. 35 லட்சத்துக்கு மஞ்சள் விற்பனையானது. கடந்த வாரத்தைவிட இது 5 லட்சம் ரூபாய் அதிகமாகும். விரலி ரகம் குவிண்டாலுக்கு ரூ.6000 முதல் ரூ. 6700 வரை விற்பனையானது, கிழங்கு ரகம் ரூ.5500 முதல் ரூ.6200 வரை விலைபோனது.

இது கடந்த வாரத்தைவிட அதிகமாகும். பனங்காளி ரகம் ரூ.7500 முதல் ரூ.9000 வரை விற்பனையானது. மஞ்சளுக்கு கூடுதல் விலை கிடைத்ததால் விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்தனர். இது கடந்த வாரத்தைவிட ரூ.800 அதிகமாகும். விவசாயிகளுக்கு பணம் அன்றே பட்டுவாடா செய்யப்பட்டதாக சங்கத்தின் மேலாண் இயக்குநர் லோகநாதன் தெரிவித்தார்.

### பால் கொள்முதல் அளவை உயர்த்த உற்பத்தியாளர்கள் முடிவு

பால் கொள்முதல் அளவை 1.65 லட்சம் லிட்டராக உயர்த்த வேண்டும் என, கிருஷ்ணகிரியில் திங்கள்கிழமை நடைபெற்ற கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் சங்க நிர்வாகிகள் கலந்தாய்வுக் கூட்டத்தில் முடிவு செய்யப்பட்டது.

தருமபுரி மாவட்டக் கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியத்தின் சார்பில், கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் சங்கத் தலைவர்கள், செயலாளர்கள் பங்கேற்ற கலந்தாய்வுக் கூட்டம் கிருஷ்ணகிரியில் திங்கள்கிழமை நடைபெற்றது.

கூட்டத்துக்கு தருமபுரி மாவட்டக் கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியத்தின் தலைவர் தென்னரசு தலைமை வகித்தார். பொதுமேலாளர் கே.கொம்பையன், துணைப் பதிவாளர் தனபால் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

கூட்டத்தில், பால் கொள்முதல் விலையை உயர்த்தியதற்கு தமிழக முதல்வருக்கு நன்றி தெரிவிக்கப்பட்டது. அரசின் சார்பில், கால்நடைகளுக்கு அளிக்கப்படும் இலவச மருத்துவம், ரூ.4 மானிய விலையில் கால்நடைகளுக்கு தீவனம் வழங்குவது போன்ற நன்மைத் தரும் திட்டங்களை விவசாயிகளுக்கு எடுத்துச் சொல்வதுடன், தினசரி பால் கொள்முதல் அளவை 1.25 லட்சம் லிட்டலிருந்து 1.65 லட்சம் லிட்டராக உயர்த்துவது என முடிவு செய்யப்பட்டது.

## டெல்டா விவசாயிகள் வரவேற்பு

காவிரி நடுவர் மன்றத்துக்கு தலைவராக நீதிபதி செப்கான் விரைவில் நியமிக்கப்படவுள்ளதை டெல்டா விவசாயிகள் வரவேற்றுள்ளனர்.

இதுகுறித்து காவிரி டெல்டா விவசாயிகள் நலச் சங்கச் செயலர் மன்னார்குடி எஸ். ரெங்கநாதன் தெரிவித்தது:

காவிரி நடுவர் மன்றத்துக்கு விரைவில் தலைவர் நியமிக்கப்படவுள்ளது என்பது சிறப்பான செய்தி. காவிரி நடுவர் மன்றத்துக்கு ஏற்கெனவே தலைவராக இருந்த என்.பி. சிங் பதவி விலகி ஏறத்தாழ 2 ஆண்டுகள் ஆகின்றன.

தமிழகத்தை ஏதாவது ஒரு வகையில் மத்திய அரசு புறக்கணிக்கிறது என்பது உண்மை. காவிரி நடுவர் மன்றத்துக்குத் தலைவரை நியமிக்க மத்திய அரசு முயற்சி மேற்கொண்டதாகத் தெரியவில்லை. இது, உச்ச நீதிமன்றத் தலைமை நீதிபதி சதாசிவத்தின் முயற்சியாகத்தான் இருக்கும். இதற்காக சதாசிவத்துக்கு நன்றி தெரிவித்துக் கொள்கிறோம்.

காவிரி நடுவர் மன்றத்துக்குப் புதிதாக நியமிக்கப்படவுள்ள தலைவர் நிலுவையில் உள்ள மறு சீராய்வு மனுக்களை விரைவாக முடித்தாலே நமக்குத் தீர்வு கிடைக்கும். அதற்கான வாய்ப்புகள் நிறைய இருப்பதால், அதைச் செய்ய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்றார் ரங்கநாதன்.

தஞ்சை மாவட்ட காவிரி விவசாயிகள் பாதுகாப்புச் சங்கச் செயலர் சுவாமிமலை சுந்தர விமலநாதன் தெரிவித்தது:

காவிரி நடுவர் மன்றத் தலைவர் பதவி காலியாக இருந்தது. காலம் தாழ்த்தி புதிய நபர் நியமிக்கப்படவுள்ளார் என்றாலும், இதை வரவேற்கிறோம். காவிரி நடுவர் மன்றக் கூட்டம் வெள்ளம் வரும் காலத்தில் மட்டுமே நடத்தப்படுகிறது. இதுபோன்ற நிலையைத் தவிர்த்து தண்ணீர் பற்றாக்குறை காலத்திலும், இரு மாதங்களுக்கு ஒரு முறையும் கூட்டம் நடத்த நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். கூட்டம் நடத்துவது தொடர் நடவடிக்கையாக இருக்க வேண்டும் என்றார் விமலநாதன்.

முன்னோடி விவசாயி ராயமுண்டான்பட்டி வெ. ஜீவகுமார் தெரிவித்தது:

காவிரி நடுவர் மன்றத் தலைவர் பதவியை இவ்வளவு காலம் வெற்றிடமாக விட்டிருக்க வேண்டியதில்லை. தேர்தலை முன்னிட்டு தமிழக மக்களைத் திருப்திபடுத்துவதற்காக அறிவித்திருப்பது போல உள்ளது. காவிரி நடுவர் மன்றத் தலைவர் நியமனம் என்பது தாற்காலிக நடவடிக்கையாகத்தான் அமையும். காவிரி மேலாண்மை வாரியத்தையும், காவிரி ஒழுங்குமுறை ஆணையத்தையும் அமைத்தால்தான் நிரந்தரத் தீர்வு கிடைக்கும். அதற்கான நடவடிக்கையை மத்திய அரசு மேற்கொள்ள வேண்டும் என்றார் ஜீவகுமார்.

தமிழ்நாடு விவசாயிகள் சங்க (மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் சார்பு) மாவட்டச் செயலர் சாமி. நடராஜன் தெரிவித்தது:

காவிரி நடுவர் மன்றத்துக்குப் புதிய தலைவர் காலம் தாழ்த்தி நியமிக்கப்படவுள்ளார். தலைவர் பதவியில் நியமனம் செய்யப்படுவது ஒரு பெரிய விஷயமல்ல. இந்த நியமனத்தை விட நடுவர் மன்றத்தின் இறுதித் தீர்ப்புப்படி காவிரி மேலாண்மை வாரியத்தையும், காவிரி ஒழுங்குமுறை ஆணையத்தையும் அமைக்க வேண்டும். அவ்வாறு அமைத்தால்தான் காவிரி பிரச்னைக்கு தீர்வு கிடைக்கும் என்றார் நடராஜன்.

**வறட்சி நிவாரணம் கேட்டு கருகிய பயிர்களுடன் விவசாயிகள் மனு**

பயிர்கள் கருகியதால் வறட்சி நிவாரணம் வழங்க வேண்டும் என வலியுறுத்தி விவசாயிகள் கருகிய பயிர்களுடன் திங்கள்கிழமை ஆட்சியரிடம் மனு அளித்தனர்.

தூத்துக்குடி மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் திங்கள்கிழமை நடைபெற்ற மக்கள் குறைதீர் கூட்டத்தின்போது, விளாத்திகுளம் அருகேயுள்ள சிக்கிலிப்பட்டியைச் சேர்ந்த விவசாயிகள் ஆற்றங்கரை ஊராட்சித் தலைவர் சீத்தாராமன் தலைமையில் கருகிய பயிர்களுடன் சென்று ஆட்சியரிடம் மனு அளித்தனர்.

அந்த மனுவில், சிக்கிலிப்பட்டி பகுதியில் ஏறத்தாழ 1000 ஏக்கர் பரப்பளவில் மக்காச்சோளம், கம்பு, மல்லி, வத்தல் உள்ளிட்ட பயிர்கள் பயிரிட்டிருந்தோம். போதிய மழை இல்லாததால் பயிர்கள் கருகிவிட்டன.

எனவே,பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு வறட்சி நிவாரணத் தொகை வழங்க வேண்டும். தூத்துக்குடி மாவட்டத்தை வறட்சி மாவட்டமாக அறிவிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என மனுவில் தெரிவிக்கப்பட்டிருந்தது.

வறட்சி மாவட்டமாக அறிவிக்க வலியுறுத்தல்: தமிழ்நாடு விவசாயிகள் சங்க, தூத்துக்குடி மாவட்டத் தலைவர் ராகவன், மாவட்டச் செயலர் கே.பி. பெருமாள் ஆகியோர் ஆட்சியரிடம் அளித்த மனுவில், தூத்துக்குடி மாவட்டத்தில் இந்த ஆண்டு போதுமான அளவு மழை பெய்யாததால் விவசாயம் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளது.

மாவட்டம் முழுவதும் 3.5 லட்சம் ஏக்கரில் பயிரிடப்பட்ட பயிர்கள் கருகிவிட்டன. இதனால் கடன் வாங்கி விவசாயம் செய்த விவசாயிகள் பெரும் பாதிப்புக்குள்ளாகியுள்ளனர்.

எனவே, விவசாய கடன்களை ரத்து செய்து, பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு வறட்சி நிவாரணம் வழங்க வேண்டும். தூத்துக்குடி மாவட்டத்தை வறட்சி மாவட்டமாக அறிவிக்க வேண்டும் என மனுவில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அடிப்படை வசதிகள் கேட்டு மனு: தூத்துக்குடி அருகேயுள்ள செக்காரகுடி மீனாட்சிபுரம் கிராமத்தைச் சேர்ந்த பொதுமக்கள் ஆட்சியரிடம் அளித்த மனுவில், தங்களது கிராமத்தில் அடிப்படை வசதிகள் இல்லாததால், மக்கள் வீடுகளை காலிசெய்து பக்கத்து கிராமங்களில் குடியேறி வருகின்றனர். இதனால் கிராமமே காலியாகும் சூழ்நிலை ஏற்பட்டுள்ளது.

எனவே, ஆட்சியர் நேரில் பார்வையிட்டு அடிப்படை வசதிகள் செய்து கொடுத்து, புதிதாக தொகுப்பு வீடுகள், சிறு தொழிற்சாலைகள் ஏற்படுத்திக் கொடுக்கவும் நடவடிக்கை எடுகக்வேண்டும் என மனுவில் தெரிவிக்கப்பட்டிருந்தது.

தினமலர்

**இன்றைய வேளாண் செய்திகள்**

உழவர் தின விழாவில் 4 புதிய பயிர் ரகம் அறிமுகம் செய்கிறது வேளாண் பல்கலை

கோவை:""உழவர் தின விழாவில், நான்கு புதிய பயிர் ரகங்களும், ஒரு பண்ணை கருவியும் அறிமுகம் செய்யப்படவுள்ளன; 67 வகையான வேளாண் தொழில்நுட்பங்கள் உட்பட
பல தகவல்கள், ஒரே இடத்தில் கிடைப்பதால் விவசாயிகள் நல்ல முறையில் பயன்படுத்திக்கொள்ள வேண்டும்," என, தமிழ்நாடு வேளாண் பல்கலை துணைவேந்தர் ராமசாமி கூறினார்.

வேளாண் பல்கலையில் புதிய பயிர் ரகங்கள் வெளியீடு மற்றும் மாநில அளவிலான உழவர் தின விழா, வரும் 11ம் தேதி நடக்
கிறது. மாநிலத்தின் பல்வேறு பகுதிக
ளிலிருந்து விவசாயிகள், விரிவாக்க
அலுவலர்கள், வேளாண் விஞ்ஞானிகள் பங்கேற்கின்றனர்.

வேளாண் பல்கலை துணைவேந்தர் ராமசாமி நிருபர்களிடம் கூறியதாவது:

வரும் 11ம் தேதி நடக்கும் உழவர் தின விழாவில், நெல், உளுந்து, தீவனச்சோளம், ஊட்டி பட்டர் பேரி ஆகிய புதிய பயிர் ரகங்களும், மரவள்ளிக் கிழங்கு தோண்டும் பண்ணை கருவியும் அறிமுகம் செய்யப்படவுள்ளன. "வேளாண் உற்பத்தியை இரு மடங்காக்குதல், உழவர்களின் வருவாயை மும்மடங்காக்குதல்' என்ற நோக்கத்தில் நிரந்தரமான மத்திய பொருட்காட்சி உருவாக்கப்பட்டு திறக்கப்பட உள்ளது. 67 வகை வேளாண் தொழில்நுட்பங்கள் மற்றும் பயிர்வகைகள் குறித்து கருத்துக்காட்சி மூலம் விளக்கமளிக்கப்படுகிறது.

இவ்வாண்டு முதல் புதிய ரகங்கள், தொழில்நுட்பங்கள் ஆகியவற்றை விவ சாயிகள் பெற்றுச்செல்வதற்கு தேவை யான உற்பத்தியை வேளாண் பல்கலை செய்யும். ஒரே இடத்தில் பண்ணைக் கருவிகள், நாற்றுகள், இடுபொருட்கள், விளைபொருட்கள் என அனைத்தும் விற்பனை மற்றும் கண்காட்சிக்கு வைக்கப்படுகிறது; நேரடி விளக்கங்களும் அளிக்கப்படும். வேளாண் தொழில்நுட்பம் சம்பந்தமான சந்தேகங்களுக்கு தீர்வுகாணும் வகையில் உழவர்கள் - விஞ்ஞானிகள் கலந்துரையாடல் நிகழ்ச்சியும் நடக்கிறது.

விவசாயிகளின் கருத்துக்கேட்பு நிகழ்ச்சியும் நடக்கிறது. பல்கலை பண்ணை பகுதிகளை பார்வையிடும் வகையில் இரு சக்கரம் மற்றும் நான்கு சக்கர மின் வாகனங்களின் சேவை வழங்கப்பட உள்ளது; மொத்தம் 4,000 விவசாயிகள் பங்கேற்கவுள்ளனர். விவசாயிகளுக்கு தேவையான அனைத்து தகவல்களும், தேவைகளும் ஒரே கூரையின் கீழ் கிடைப்பதால் இவற்றை நல்ல முறையில் பயன்படுத்திக்கொள்ளலாம்.

இவ்வாறு, அவர் கூறினார்.

## நெற்பயிரில் "நெல்லு பழம்' நோய் தாக்குதல்அறுவடைக்கு தயாரான விவசாயிகள் வேதனை

காட்டுமன்னார்கோவில்: சிதம்பரம் காட்டுமன்னார்கோவில் பகுதியில் அறுவடைக்கு 10 நாட்களே உள்ள நிலையில் "நெல்லு பழம்' என்ற கொலை நோய் தாக்குதலால் கருகும் நெல் மணிகளைக் கண்டு விவசாயிகள் வேதனையடைந்துள்ளனர்.காவிரி டெல்டா பகுதி கடைமடைப் பகுதிகளான சிதம்பரம், காட்டுமன்னார்கோவில், குமராட்சி பகுதிகள் முற்றிலும் விவசாயம் சார்ந்த பகுதியாக உள்ளது. இப்பகுதி விவசாயிகள் கீழணை மற்றும் வீராணம் ஏரி பாசனத்தை நம்பி விவசாயம் செய்கின்றனர்.கடந்த இரண்டு ஆண்டுகளாக போதிய மழையின்மை காரணமாக கடந்த ஆண்டு குறுவை மற்றும் சம்பா

விவசாயம் கேள்விக்குறியானது.இந்த ஆண்டு விவசாயிகள் சம்பா பருவத்தில் காட்டுமன்னார்கோவில், குமராட்சி, சிதம்பரம் பகுதியில் 60 ஏக்கர் சம்பா பயிரில் 50 ஆயிரம் ஏக்கர் நேரடி நெல் விதைப்பு செய்தனர்.போதிய அளவு தண்ணீர் கிடைத்ததால் நம்பிக்கையோடு பயிரை உரமிட்டு ஆரோக்கியமாக வளர்ந்து வந்த நிலையில், கடந்த மாதத்தில் பல்வேறு இடங்களில் இலைக் கருகல் நோய் தாக்கியது. இருப்பினும் உரமிட்டு பயிரைக் காத்தனர்.தை பிறந்தால் அறுவடைக்குத் தயாராகும் நிலையில், கடும் பனிப் பொழிவு காரணமாக எதிர்பாராத வகையில் தற்போது "நெல்லு பழம்' என்ற நோய் தாக்கியுள்ளது. இந்த வகை நோய் தாக்குதலுக்குள்ளான நெல் மணிகள் முற்றிலும் கருகிவிடும். இதனால் உள்ளிருக்கும் அரிசி பதராகி விடும். அறுவடை நேரத்தில் வந்த நோய் தாக்குதலால் விவசாயிகள் செய்வதறியாது தவித்து நிற்கின்றனர்.இது குறித்து குமராட்சி விவசாயி தமிழ்வாணன் கூறுகையில், "குடும்பத்தைக் காக்க வேண்டும் என்ற நோக்கில் விவசாயிகள் நம்பிக்கையோடு கடன் பட்டு விவசாயம் செய்து வருகிறோம்.போதிய மழை இல்லாமல் போனாலும் கூட எப்படியோ பயிரைக் காத்து அறுவடை வரை கொண்டு வந்தோம். இன்னும் 10 நாட்களில் அறுவடை செய்ய உள்ள நிலையில் "நெல்லு பழம்' எனும் கொலை நோய், தாக்குதலில் பயிர்கள் பாதிக்கப்பட்டுள்ளன. இப்படியே போனால் விவசாயிகளின் கதி என்ன ஆகும் என தெரியவில்லை' என்றார் வேதனையுடன்.

### மஞ்சள் பயிர் அறுவடைக்கு.. பொங்கலுக்கு விவசாயிகள் தீவிரம்

விருத்தாசலம் : பொங்கல் பண்டிகையை முன்னிட்டு சிறுபாக்கம் பகுதியில் பயிர் செய்துள்ள மஞ்சள் அறுவடைக்குத் தயாராக உள்ளது.உழவர் திருநாளான பொங்கல் பண்டிகையின் போது, புது பானைகளில் மஞ்சள் கொத்துகளை கட்டி, பொங்கலிட்டு, கரும்பு வைத்து சூரியனை தமிழர்கள் வழிபடுவது வழக்கம்.பொங்கல் பண்டிகையின் போது அறுவடை செய்ய ஏதுவாக கடலூர் மாவட்டத்தில் விருத்தாசலம், திட்டக்குடி, கழுதூர், சிறுபாக்கம், நல்லூர்,

மாங்குளம், குளவாய், பாசார், வடபாதி, கொரக்கவாடி, புதூர், சேப்பாக்கம், கண்டமாத்தூர், கோ.ஆதனூர், மங்கலம்பேட்டை உட்பட 30க்கும் மேற்பட்ட கிராமங்களில் கடந்த ஏப்ரல், மே மாதங்களில் 7,500 ஏக்கர் பரப்பளவில் விவசாயிகள் மஞ்சள் சாகுபடி செய்துள்ளனர்.அதில் பி.எஸ்.ஆர் - 1 (பவானி சாகர்), பி.எஸ்.ஆர் - 2, நாட்டு மஞ்சள் ரகங்கள் அதிகளவில் பயிரிடப்பட்டுள்ளன. பொங்கல் பண்டிகைக்கு ஒரு வாரம் இருக்கும் நிலையில், எட்டு முதல் பத்து மாதப் பயிரான மஞ்சள் செடிகள் வளர்ந்து தற்போது அறுவடைக்குத் தயாராக உள்ளன.மஞ்சளை அறுவடை செய்து ஈரோடு, சேலம், சென்னை, மதுரை, திருச்சி பகுதிகளுக்கு அனுப்புவதற்கான ஆயத்தப் பணியில் விவசாயிகள் ஈடுபட்டு வருகின்றனர்.சிறுபாக்கம் விவசாயி வெங்கடேசன் கூறுகையில், "ஆண்டுதோறும் வைகாசி மாதத்தில் மஞ்சள் பயிரிடுவது வழக்கம். அதில் ஒரு பகுதியை பொங்கல் பண்டிகைக்காக மஞ்சள் கொத்துகளை அறுவடை செய்து, நகரங்கள், வார சந்தைகளில் விற்பனை செய்யப்படும்.

மீதமுள்ள மஞ்சளை அறுவடை செய்து, அவித்து, அதனை களத்தில் மூன்று வாரங்கள் வரை உலர்த்தி, இயந்திரம் மூலம் பாலீஷ் செய்து, பதப்படுத்தி ஈரோடு, நாமகிரிப்பேட்டை, திருச்செங்கோடு, ஆத்தூர் பகுதி மஞ்சள் கமிட்டிகளுக்கு எடுத்துச் சென்று எடை போட்டு, போதிய விலை கிடைக்கவில்லையெனில் இருப்பு வைத்து விடுவோம். பின்னர் விற்கப்படும். ஏக்கருக்கு 10 குவிண்டால் வரை மஞ்சள் விளையும்' என்றார்.மங்களூர் தோட்டக்கலை உதவி இயக்குனர் முருகன் கூறுகையில், "விருத்தாசலம், வேப்பூர், மங்களூர், நல்லூர் பகுதிகளில் சாகுபடி செய்யப்படும் மஞ்சளில் சில ரகங்களை பொங்கல் பண்டிகைக்காக அறுவடை செய்து, தமிழகத்தின் பல பகுதிகளுக்கு விவசாயிகள் அனுப்புவர். அதே சமயத்தில் சாகுபடி செய்துள்ள சில மஞ்சள் ரகங்கள், பொங்கல் பண்டிகைக்குப் பின் அறுவடை செய்து ஈரோடு மார்க்கெட் கமிட்டிக்கு (மஞ்சள்) அனுப்பப்படும்' என்றார்.

## விலை இல்லாத செண்டு பூக்கள்: பறிக்க மனம் இல்லை



ஆண்டிபட்டி: விலை கிடைக்காததால், தேனி மாவட்டம் ஆண்டிபட்டி பகுதியில் விளைந்த செண்டு பூக்களை, தோட்டங்களில் பறிக்காமலே விட்டுள்ளனர். ஆண்டிபட்டி பகுதியில் உள்ள பல கிராமங்களில், செண்டு பூக்கள் சாகுபடி அதிகளவில் உள்ளது. சபரி மலைக்காலம், தைப்பொங்கலில் செண்டு பூக்களின் தேவை அதிகம் என்பதால், விவசாயிகள் அக்டோபர், நவம்பர் மாதங்களில் நடவு பணிகளை துவக்கி விடுவர். இரண்டு மாதத்தில் பலன் தரும் இச்செடிகளில், தொடர்ந்து இரண்டு மாதம் வரை பூக்கள் பறிக்கலாம். ஒரு ஏக்கரில், 5 டன் வரை விளைச்சல் இருக்கும் என்பதால், விவசாயிகள் செண்டு பூக்களை விரும்பி சாகுபடி செய்வர். இந்த ஆண்டு, செண்டு பூக்கள் விலை சரிந்ததால் விவசாயிகளுக்கு பாதிப்பு ஏற்பட்டுள்ளது.

இதுகுறித்து திம்மரசநாயக்கனூர் விவசாயிகள் கூறுகையில், 'கடந்த ஆண்டு இதே நாளில், செண்டு பூக்கள் விலை கிலோவிற்கு, 50 ரூபாய் வரை கிடைத்தது. இந்த ஆண்டு 5 முதல் 10 ரூபாய் தான் கிடைக்கிறது. எடுப்புக்கூலி, போக்குவரத்து செலவை கணக்கிட்டால் நஷ்டம் தான். எனவே, பூக்களை பறிக்காமல் விட்டுவிட்டோம்' என்றனர்.

## பச்சரிசி விலை திடீர் உயர்வு

சேலம்: பொங்கல் பண்டிகை காரணமாக, பச்சரிசியின் விலை உயர்ந்துள்ளது. ஜனவரி, 14ம் தேதி, பொங்கல் பண்டிகை கொண்டாடப்பட உள்ளது. இதற்காக, தமிழகத்தில், சில நாட்களாக, பச்சரிசி விற்பனை சூடுபிடித்துள்ளது. ஆந்திராவில் இருந்து, தமிழகத்துக்கு விற்பனைக்கு வந்து கொண்டு இருந்த பச்சரிசியின் வரத்தில், கடந்த வாரம் சரிவு ஏற்பட்டது. இதை அறிந்த, கர்நாடகா வியாபாரிகள், செயற்கை தட்டுப்பாட்டை ஏற்படுத்தி, பச்சரிசியின் விலையை திடீரென, உயர்த்தி உள்ளனர். கர்நாடகா, ரெய்ச்சூர் பகுதியில் இருந்து, தமிழகத்தின், சேலம், மதுரை, சென்னை, கோவை, ஈரோடு மற்றும் திருச்சி ஆகிய இடங்களுக்கு விற்பனைக்கு வரும், கர்நாடகா சோனா (பழையது) பச்சரிசி விலை, குவிண்டாலுக்கு, 500 ரூபாய் வரை உயர்ந்துள்ளது. சோனா பச்சரிசி (புதியது), குவிண்டாலுக்கு, 300 ரூபாய் உயர்ந்துள்ளது. கடந்த வாரம் வரை, மொத்த விலையில், சோனா பச்சரிசி (பழையது), கிலோ, 45 ரூபாய்க்கு விற்றது, நேற்று, 51 ரூபாயாக உயர்ந்தது. கிலோ, 36 ரூபாய்க்கு விற்ற, சோனா பச்சரிசி (புதியது), 42 ரூபாயாக அதிகரித்துள்ளது. இதே போல், குஜாத் பான்சால் அரிசி, கிலோ, 52 ரூபாயில் இருந்து, 60 ரூபாயாக உயர்ந்துள்ளது.

## தர்பூசணி விளைச்சல் அமோகம்

கண்டாச்சிபுரம் :வீரங்கிபுரம் பகுதியில் அமோகமான தர்பூசணி விளைச்சலால் விவசாயிகள் மகிழ்ச்சியடைந்துள்ளனர்.கண்டாச்சிபுரம் அடுத்த வீரங்கிபுரம், ஒட்டம்பட்டு, அருணாபுரம், ஒடுவன் குப்பம், கடையம், உடையாநத்தம் பகுதி விவசாயிகள், சமீபத்தில் பயிரிட்ட புதிய ரக தர்பூசணி விளைந்துள்ளது. ஒரு தர்பூசணி 12 கிலோவிற்கு மேல் எடை இருக்கும் என்பதால் கடந்த ஆண்டை விட இந்த ஆண்டு கூடுதல் மகசூலும், லாபம் பெறக்கூடிய வாய்ப்பிருப்தாக தெரிவித்தனர். பருவ சூழ்நிலை தங்களுக்க சாதகமான இல்லாத போதிலும் இந்த விளைச்சல் நன்றாக உள்ளது. சென்னை, ஓசூர், பெங்களூரு போன்ற நகரங்களில் இருந்து மொத்த வியாபாரிகள் வந்து வாங்கிச் செல்வதாக கூறினர்.

## மானாவாரி உளுந்து அறுவடை துவக்கம்உலர் களம் இன்றி விவசாயிகள் தவிப்பு

தியாகதுருகம் :தியாகதுருகம் பகுதியில் உளுந்து அறுவடை துவங்கியுள்ளதால் போதிய உலர் களமின்றி விவசாயிகள் அவதிப்பட்டு வருகின்றனர்.

தியாகதுருகம், ரிஷிவந்தியம் பகுதியில் 8 ஆயிரம் ஏக்கர் பரப்பில் மானாவாரி உளுந்து சாகுபடி செய்யப்பட்டுள்ளது. கடந்த அக்., மாதம் பெய்த மழை ஈரத்தை பயன்படுத்தி உளுந்து விதைத்தனர். அதன் பின் சீராக மழை பெய்ததால் களைபறித்து, மருந்து தெளித்து பராமரித்து வந்தனர்.கனமழை, காற்று இல்லாததால் கடந்த 4 ஆண்டுகளில் இல்லாத அளவுக்கு உளுந்து மகசூல் தற்போது அதிகரித்துள்ளது. சில தினங்களாக உளுந்து அறுவடையை விவசாயிகள் துவக்கியுள்ளனர். காய்களில் இருந்து உளுந்து மணிகளை பிரித்தெடுக்க தார்சாலையில் காயவைப்பது வழக்கம். அறுவடை செய்த செடிகளின் மீது வாகன சக்கரங்கள் ஏறும்போது மணிகள் பிரிகிறது. இதனை காற்றில் தூற்றி சுத்தப்படுத்துகின்றனர்.இதை சாலையில் செய்வதால் வாகனஓட்டிகளுக்கு கடும் சிரமத்தை ஏற்படுத்துகிறது. சாலையில் தானியங்கள் உலர்த்த தடை விதித்த போதிலும், விவசாயிகள் இதை பின்பற்றுவதில்லை. இதற்கு முக்கிய காரணம் போதிய உலர் களங்கள் கிராமப்புறங்களில் இல்லாததேயாகும்.ஒரே நேரத்தில் நெல், உளுந்து, பருத்தி, மக்காச்சோளம் பயிர்கள் அறுவடை செய்யப்படும் பணிகள் நடந்து வருவதால் பல இடங்களில் தார்சாலைகளே உலர்களமாக பயன்பட்டு வருகிறது. உயிரை பணயம் வைத்து விளை பொருட்களை தார்சாலையில் உலர்த்துவதை தவிர்த்திட போதிய உலர் களங்களை கட்ட ஊராட்சி நிர்வாகம் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

## வரத்து குறைவால் வாழை விலை உயர்வு

சத்தியமங்கலம்: சத்தியமங்கலம் பகுதியில், வாழை சீசன் முடிவுக்கு வருவதால், நேற்று விற்பனைக்கு வந்த வாழைகளின் அளவு குறைவாக இருந்தது. இதனால் விலை சற்று அதிகரித்தது.

சத்தியமங்கலம் மற்றும் பவானிசாகர் பகுதியில், 5,000 ஏக்கருக்கு மேல் வாழை பயிரிட்டுள்ளனர். கதளி, நேந்திரம், செவ்வாழை, பூவன் உள்ளிட்ட வாழை ரகங்கள் முக்கியத்துவம் பெற்றதாகும்.இப்பகுதியில் விளையும் வாØ ழகளை,

சத்தியமங்கலம், கோபி ரோட்டில் உள்ள, தொடக்க வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனை சங்கம் மூலம், ஏலம் முறையில் விற்பனை செய்வது வழக்கம்.ஒவ் வொறு வாரமும் திங்கள் மற்றும் வெள்ளிக்கிழமைகளில் இங்கு ஏலம் நடக்கும்.

இந்த ஏலத்தில், ஈரோடு மாவட்டத்தில், பல்வேறு பகுதிகளில் இருந்தும், கோவை, திருப்பூர் மாவட்டங்களில் இருந்தும், வியாபாரிகள் வந்து வாழை தார்களை ஏலம் எடுக்கின்றனர். நேற்று நடந்த ஏலத்தில் கதளி மற்றும் நேந்திரம் வாழை, பத்து டன் விற்பனைக்கு வந்தது. கடந்த வாரம் கிலோ, 30 ரூபாய்க்கு விற்பனையான கதளி, நேற்று கிலோ, 33 ரூபாய் வரை விற்பனையானது. நேந்திரம், கடந்த வாரம் கிலோ, 31 ரூபாய்க்கு விற்பனையானது. நேற்று கிலோ, 36 ரூபாய் வரை விற்பனையானது. இதேபோல், அனைத்து ரக வாழை தார்களும், நேற்று விலை சற்று அதிகமாக விற்பனையானது.

## மலர் சாகுபடி விவசாயிகள் சங்கம் சார்பில் ஆர்ப்பாட்டம்

ஊட்டி:நீலகிரி மாவட்ட மலர் சாகுபடி சிறு விவசாயிகள் சங்கம் சார்பில், ஊட்டி ஏ.டி.சி., திடலில் ஆர்ப்பாட்டம் நடந்தது.

வலியுறுத்தப்பட்ட கோரிக்கைகள்: கொய்மலர் சாகுபடியில், 500க்கும் மேற்பட்ட சிறு விவசாய குடும்பத்தினர் ஈடுபட்டுள்ளனர். தொழில் நஷ்டமடைய, தனியார் நிறுவனங்கள் தரமற்ற நாற்று, விதைகளை அதிக விலைக்கு விற்று ஏமாற்றின. உற்பத்தி செலவு அதிகரித்ததால், கொய் மலர்களுக்கு நியாயமான விலை கிடைக்கவில்லை. இதனால், வங்கி கடன்களை, தள்ளுபடி திட்டத்தின் கீழ் கொண்டு வர வேண்டும்; ஜப்தி நடவடிக்கைகளை வங்கிகள் நிறுத்த வேண்டும்; ஊட்டியில், கார்னேஷன் நாற்று உற்பத்தி மையப் பணிகளை துரிதப்படுத்த வேண்டும்; ஊட்டியில் மலர் ஏற்றுமதி மையத்தை செயல்பாட்டுக்கு கொண்டு வர வேண்டும்; தரமற்ற நாற்றுகளை வினியோகம் செய்து ஏமாற்றிய தனியார் நிறுவனங்கள் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பன உட்பட பல்வேறு கோரிக்கைகள் வலியுறுத்தப்பட்டன. பின், ஊர்வலமாக சென்று, மாவட்ட கலெக்டரிடம் மனு வழங்கினர். ஆர்ப்பாட்டத்திற்கு, சங்க தலைவர் விசுவநாதன் தலைமை வகித்தார். செயலர் கிருஷ்ணமூர்த்தி முன்னிலை வகித்தார்.

## விவசாயிகளுக்கு "கசக்கும்' கரும்பு விலையை அதிகரிக்க வலியுறுத்தல்

தேனி:கரும்புக்கு நிர்ணயித்துள்ள விலையை அதிகரித்து வழங்காவிட்டால், இந்த ஆண்டும் விவசாயிகளுக்கு "கரும்பு கசக்கும்' என விவசாயிகள் வலியுறுத்தியுள்ளனர்.

தேனி மாவட்டம், கூடலூரில் 80 எக்டேரில், கரும்பு விவசாயம் செய்து வருகிறார்கள்.இதே போல், மாவட்டத்தின் பல பகுதிகளில் கரும்பு விவசாயம் செய்யப்பட்டுள்ளது. கடந்த பத்து ஆண்டுகளாக கரும்பு விவசாயம் செய்து வருகின்றனர். கரும்புக்கு மத்திய, மாநில அரசுகள் அறிவித்த விலை விவசாயிகளுக்கு கட்டுப்படியாகவில்லை.

கடந்த ஆண்டு கரும்பு டன் ஒன்றுக்கு 2,350 ரூபாய் வழங்கினர். ஆனால்,குத்தகை, உழவு, விதை கருணை, நடவு கூலி, உரம், களை எடுப்பு, மண் அணைக்க, வெட்டுக்கூலி, லோடு ஏற்ற என ஒரு ஏக்கர் கரும்பு விவசாயத்திற்கு, 1 லட்சத்து 4 ஆயிரத்து 300 ரூபாய் செலவாகிறது. கரும்பு டன் ஒன்றுக்கு நிர்ணயித்துள்ள விலை 2,650.

ஒரு ஏக்கரில் 30 டன் கிடைத்தால், 79 ஆயிரத்து 500 ரூபாய் கிடைக்கும். இதனால் எங்களுக்கு ஏக்கருக்கு 24 ஆயிரத்து 800 ரூபாய் இழப்பு ஏற்படுகிறது. எனவே ஆண்டுதோறும் கசக்கும் கரும்பு விவசாயத்தை, இனிப்பாக மாற்றுவதற்கு, உரம், பூச்சி மருந்திற்கான மானியம் கிடைக்கவும், மத்திய,மாநில அரசுகள் கரும்புக்கு நிர்ணயம் செய்துள்ள விலையை அதிகரித்து வழங்க வேண்டும்.

டன் ஒன்றுக்கு 3,750 ரூபாய் நிர்ணயம் செய்து உடனடியாக அமல் படுத்தினால் தான் நாங்கள் குறைந்த லாபம் பெற முடியும்.

கரும்பு விவசாயத்தை தொடர முடியும், என கீழ கூடலூர் விவசாயிகள் பாண்டியன், குமார் உள்ளிட்ட 50 க்கும் மேற்பட்டோர் தேனி கலெக்டர் அலுவலகம் முன் ஆர்ப்பாட்டத்தில், ஈடுபட்டு கலெக்டரிடம் மனு கொடுத்துச் சென்றனர்.

## கோமாரி நோய்க்கு மாடு பலி

தேனி:தேனியில் கோமாரி நோய்க்கு மாடு இறந்தது. கால்நடைத்துறைக்கு தகவல் தெரிவித்து, 7 மணி நேரத்திற்கு மேல் ஆகியும் யாரும் வரவில்லை. தேனியில் கொட்டகுடி ஆற்றங்கரை தெருவில் வசிக்கும் கருத்தப்பாண்டி, 49, என்பவரின் பசுமாடு ஒன்று கடந்த வாரம் இறந்தது. அப்போது கால்நடைத்துறையினருக்கு தகவல் தெரிவித்தும் வரவில்லை.

இந்நிலையில், நேற்று மதியம் 12 மணிக்கு மற்றொரு மாடு இறந்தது. இது குறித்து வார்டு கவுன்சிலர் ரவிக்குமார் கால்நடைத்துறை இணை இயக்குனருக்கு தகவல் தெரிவித்தார். தொடர்ந்து 1 மணி நேரத்திற்கு ஒருமுறை தகவல் தெரிவிக்கப்பட்டும், இரவு 7 மணி வரை கால்நடைத்துறை அதிகாரிகள் யாரும் வரவில்லை. அதிகாரிகள் வருவார்கள் என இறந்த மாட்டுடன் 7 மணி நேரமாக காத்திருந்த விவசாயி, பின்னர் வேறு வழியின்றி அடக்கம் செய்தார்.

தினகரன்

**இன்றைய வேளாண் செய்திகள்**

**பயிர் காப்பீட்டு திட்டத்தின் கூடுதல் பிரீமியம் தொகையை பகிர்ந்து கொள்ள வேண்டும் : ஜெயலலிதா**



சென்னை: விவசாயிகளுக்கான புதிய பயிர் காப்பீட்டு திட்டத்தில் 2 சதவீதத்திற்கு மேற்பட்ட பிரீமியம் தொகையை மத்திய, மாநில அரசுகள் பகிர்ந்து கொள்ள வேண்டும் என்று பிரதமருக்கு ஜெயலலிதா யோசனை கூறியுள்ளார். இதுகுறித்து பிரதமர் மன்மோகன் சிங்குக்கு முதல்வர் ஜெயலலிதா நேற்று அனுப்பியுள்ள கடிதத்தில் கூறி இருப்பதாவது: வேளாண் காப்பீட்டு பிரீமியம் தொகைக்கு மேலாக மத்திய அரசு பயிர் இழப்பீட்டு தொகையில் 50 சதவீதத்தை அளிக்கும் நிலையில், தமிழகத்தை சேர்ந்த விவசாயிகளுக்கு 45 முதல் 50 சதவீதம் பிரீமியம் தொகையை மானியமாக, மாநில அரசு வழங்கி வருகிறது.

இந்த நிலையில் புதிய தேசிய பயிர் காப்பீட்டு திட்டத்தை, மாநில அரசுகளுடன் உரிய ஆலோசனை நடத்தாமல், திடீரென்று மத்திய அரசு அறிமுகப்படுத்தி உள்ளது. புதிய காப்பீட்டு திட்டத்தின் கீழ் பயிர்களுக்கான பிரீமியம் தொகை வெகுவாக உயர்ந்திருக்கிறது. காப்பீடு செய்யப்படும் தொகையில் 2 முதல் 3.5 சதவீத பிரிமியம் தொகையாக இருந்த நிலை மாறி இப்போது, 3.75 சதவீதம் முதல்

4.8 சதவீதம் வரை பிரீமியம் தொகை செலுத்த வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.

இதுபோன்ற அதிக பிரீமியம் தொகை செலுத்த வேண்டி வருமானால், ஏற்கனவே பருவ நிலை ஆபத்து உள்ள சூழ்நிலையில் பயிர் காப்பீட்டை விவசாயிகள் மேற்கொள்வார்களா? என்பது சந்தேகம். இந்த ஆண்டு வடகிழக்கு பருவமழை 33 சதவீதம் அளவுக்கு குறைவாக பெய்துள்ளதாலும், 2012-13ம் ஆண்டில் கடுமையான வறட்சி நிலவியதாலும் ஏற்கனவே கடும் சிரமங்களை எதிர்கொண்டுள்ள தமிழக விவசாயிகள், இதுபோன்ற கூடுதல் காப்பீட்டு பிரீமியம் சுமையால், மேலும் பாதிப்புக்கு ஆளாவார்கள்.

இந்த சூழ்நிலையில், பயிர் காப்பீட்டு திட்ட பிரீமியம் தொகை உயர்வை தமிழக அரசு ஏற்றுக்கொள்ளாது. எனவே, தேசிய பயிர் காப்பீட்டு திட்டத்தின் கீழ் காப்பீடு செய்யப்படும் தொகைக்கான பிரீமியம் தொகை, 2 சதவீதம் அல்லது அதற்குமேல் கூடுதலாகும்போது, அந்த சுமையை விவசாயிகளின் மீது சுமத்தாமல், மத்திய அரசும், மாநில அரசும் சமமாக பகிர்ந்து செலுத்தலாம். இந்த விஷயத்தில் தாங்கள் தலை யிட்டு உடனடி நடவடிக்கை எடுக்க வேண்டும். இவ்வாறு ஜெயலலிதா கடிதத்தில் கூறியுள்ளார்.

**850 மூட்டை மஞ்சள் ரூ.35 லட்சத்திற்கு விற்பனை**



திருச்செங்கோடு: திருச்செங்கோடு வேளாண் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனைச் சங்கத்தில் நேற்று நடந்த ஏலத்தில், 850 மூட்டை மஞ்சள் ரூ.35 லட்சத்திற்கு விற்பனையானது. திருச்செங்கோடு வேளாண் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனைச் சங்கத்திற்கு  கடந்த வாரத்தை விட மஞ்சள் வரத்து

அதிகமாக இருந்தது. மற்ற இடங்களை ஒப்பிடுகையில் இங்கு அதிக விலை கிடைப்பதால், ஏராளமான விவசாயிகள் மஞ்சளை விற்பனைக்கு கொண்டு வந்தனர். விரலி ரகம் குவிண்டாலுக்கு ரூ.6000 முதல் ரூ.6700 வரை விற்பனையானது.

கிழங்கு ரகம் ரூ.5500 முதல் ரூ.6200 வரை விற்பனையானது. அதே போல, பனங்காளி ரகம் ரூ.7000 முதல் ரூ.9000 வரை விற்பனையானது. மொத்தம் 850 மூட்டை மஞ்சள் ரூ.35 லட்சத்திற்கு விற்பனையானது. இது கடந்த வாரத்தை விட ரூ.5 லட்சம் அதிகம். மஞ்சளுக்கு கூடுதல் விலை கிடைத்ததால் விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்தனர்.

**காற்றழுத்த தாழ்வு நிலை காரணமாக ராமேஸ்வரத்தில் கடல் சீற்றம் அதிகரிப்பு**



ராமேஸ்வரம்: ராமேஸ்வரத்தில் கடல் சீற்றம் அதிகரித்துள்ளதால், மீனவர்கள் கடலுக்கு செல்ல நேற்று தடை விதிக்கப்பட்டது. வங்கக்கடலில் நாகப்பட்டினத்தில் இருந்து 470 கிமீ தொலைவில் கடந்த 5ம் தேதி குறைந்த காற்றழுத்த தாழ்வு நிலை ஏற்பட்டது. அதனால், பாம்பன் துறைமுகத்தில் 1ம் எண் புயல் எச்சரிக்கை கூண்டு ஏற்றப்பட்டது. மீனவர்கள் கடலுக்கு செல்ல வேண்டாம் என்றும் எச்சரிக்கப்பட்டது. இந்த எச்சரிக்கை வருவதற்கு முன்பாக கடலுக்கு சென்ற மீனவர்கள் நேற்று காலை கரை திரும்பினர்.

குறைந்த காற்றழுத்த தாழ்வு நிலை தீவிரமடைந்து வருவதால், பாம்பன், ராமேஸ்வரம் மற்றும் தொண்டி கடல் பகுதியில் நேற்று முதல் காற்றின் வேகம் அதிகரித்து காணப்படுகிறது. கடல் சீற்றம் வழக்கத்தைவிட அதிகமாக உள்ளது. அதனால் மீனவர்கள் கடலுக்கு செல்ல மீன்வளத்துறை அதிகாரிகள் தடை

விதித்தனர். ராமேஸ்வரம் துறைமுகத்தில் மீன் பிடி டோக்கன் வழங்கும் இடத்தில் கடலுக்கு செல்லவேண்டாம் என எச்சரிக்கை பலகை வைக்கப்பட்டுள்ளது.

அதனால், ராமேஸ்வரம், பாம்பன் மற்றும் தொண்டி துறைமுகத்தில் இருந்து மீனவர்கள் நேற்று கடலுக்கு செல்லவில்லை. அவர்களின் படகுகள் துறைமுகப் பகுதியில் நங்கூரமிட்டு நிறுத்தி வைக்கப்பட்டுள்ளன. தனுஷ்கோடி கடல் பகுதியில் காற்றின் வேகம் மிகவும் கூடுதலாக காணப்படுவதால், தனுஷ்கோடி, சங்குமால், முகுந்தராயர் சத்திரம், தங்கச்சிமடம் நாட்டுப் படகு மீனவர்களும் கடலுக்கு செல்லவில்லை.

வானிலை ஆய்வு மையம்

**9 மாவட்டங்களில் கனமழை பெய்யும்**




சென்னை: வங்கக் கடலில் உருவான காற்றழுத்த தாழ்வு நிலை வலு குறைந்து காற்றழுத்தமாக மாறியுள்ளது. இதையடுத்து 9 மாவட்டங்களில் இன்று கனமழை பெய்யும் என்று சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது. தென் கிழக்கு வங்க கடலில் கடந்த வாரம் உருவான குறைந்த காற்றழுத்த தாழ்வு நிலை மேற்கு நோக்கி நகர்ந்து இலங்கையை கடந்து மன்னார் வளைகுடா பகுதியில் நிலை கொண்டு இருந்தது. அது நேற்று வலு குறைந்து, குறைந்த காற்றழுத்தமாக மாறியுள்ளது. இதையடுத்து, ராமநாதபுரம், திருநெல்வேலி, தூத்துக்குடி, கன்னியாகுமரி, மதுரை, தேனி, திண்டுக்கல், சிவகங்கை, விருதுநகர் ஆகிய மாவட்டங்களில் இன்று கனமழை பெய்யும். வட மாவட்டங்களில் வறண்ட வானிலை காணப்பட்டாலும்

மேகமூட்டம் காணப்படும். மன்னார் வளை குடாப் பகுதியில் கடல் காற்று மணிக்கு 45 கிமீ முதல் 55 கிமீ வேகத்தில் வீசும். சில நேரங்களில் 60 கிமீ வேகத்திலும் வீசும். சில இடங்களில் கடல் சீற்றம் காணப்படும்.

கடலூர் நாகப்பட்டினம், சென்னை ஆகிய துறைமுகங்களில் காற்றழுத்தம் நிலை கொண்டுள்ள தூரத்தை காட்டும் 1ம் எண் எச்சரிக்கை கூண்டு ஏற்றப்பட்டுள்ளது. அதே போல எண்ணூர், காரைக் கால், பாம்பன், தூத்துக்குடி துறைமுகங்களிலும் எச்சரிக்கை கூண்டு 1 ஏற்றப்பட்டுள்ளது. தஞ்சாவூர், திருவாரூர், நாகப்பட்டினம் மாவட்டங்களில் ஒரு சில இடங்களில் கனமழை பெய்யும்.

**காவிரியிலிருந்து கூடுதலாக 65 டிஎம்சி தண்ணீர் வேண்டும் : உச்ச நீதிமன்றத்தில் தமிழக அரசு மனு**



புதுடெல்லி: தமிழகத்துக்கு கூடுதலாக 65 டிஎம்சி தண்ணீர் திறந்துவிட உத்தரவிடக்கோரி தமிழக அரசு உச்ச நீதிமன்றத்தில் புதிய மனுவைத் தாக்கல் செய்துள்ளது. டெல்டா விவசாயிகளின் முக்கிய நீர் ஆதாரமான காவிரியில் தண்ணீர் இல்லை. மேட்டூர் அணையும் தண்ணீர் இல்லாமல் குட்டைபோல் ஆகிவிட்டது. ஏற்கனவே குறுவைச் சாகுபடியில் கடந்த ஆண்டு பலத்த நஷ்டம் அடைந்த டெல்டா விவசாயிகள் சம்பா பயிரை நம்பினர். அதுவும் பயனில்லாமல் போனது. இந்நிலை யில், தமிழகத்துக்கு தரவேண்டிய தண்ணீரைத் தர கர்நாடக அரசு தொடர்ந்து மறுத்து வருகிறது.

காவிரி நதி நீர் ஆணையத்தின் உத்தரவையும், காவிரி கண்காணிப்புக் குழு பரிந்துரையையும், உச்ச நீதிமன்ற இடைக்காலத் தீர்ப்புகளை யும் அமல்படுத்த

கர்நாடக அரசு மறுத்துவிட்டது. இதையடுத்து, காவிரியில் தண்ணீர் திறந்துவிடக் கோரி தமிழக அரசு உச்ச நீதிமன்றத்தில் தாக்கல் செய்த மனுவுக்கு தண்ணீர் தர முடியாது என்று கர்நாடக அரசு பதில் மனு தாக்கல் செய்தது. இந்நிலையில், இரு மாநில முதல்வர்களும் பேசி சுமுகத் தீர்வை எட்ட வேண்டும் என்ற உச்ச நீதிமன்ற உத்தரவின்படி நடந்த பேச்சுவார்த்தையாலும் பயனில்லாமல் போனது.

இந்நிலையில் தமிழக அரசு உச்ச நீதிமன்றத்தில் நேற்று ஒரு புதிய மனுவைத் தாக்கல் செய்தது. அந்த மனுவில் கூறியிருப்பதாவது: காவிரி நடுவர் மன்றத்தின் தீர்ப்பின் அடிப்படையிலும், உச்ச நீதிமன்ற தீர்ப்புகளின் அடிப்படையிலும் தமிழகத்துக்குத் தரவேண்டிய தண்ணீரை கர்நாடக அரசு தராமல் இழுத்தடிக்கிறது. தமிழகத்தில் காவிரியை நம்பியுள்ள விவசாயப் பகுதிகளின் அளவை குறைத்து காட்டி குறைந்த அளவே தண்ணீர் தருகிறது.

ஆனால், கர்நாடகாவில் 16 லட்சம் ஏக்கர் நிலத்தில் விவசாயம் நடைபெறுவதை கூடுதலாக காட்டி அதாவது 18 லட்சம் ஏக்கர் நிலத்தில் விவசாயம் செய்யப்படுவதாக காட்டி தங்களுக்கு கூடுதலாக தண்ணீர் தேவைப்படுகிறது என்று கூறி வருகிறது. தமிழக விவசாயிகள் போதிய தண்ணீர் இல்லா மல் விவசாயம் பாதிக்கப் படும் நிலையில் உள்ளனர்.
இதன் அடிப்படையில் தமிழகத்துக்கு கூடுதலாக 65 டிஎம்சி தண்ணீர் திறந்துவிடுமாறு உத்தரவிட வேண்டும். இவ்வாறு மனுவில் கூறப்பட்டுள்ளது. இந்த மனு வரும் 15ம் தேதி விசாரணைக்கு வரும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

**வரத்து அதிகரிப்பால் தக்காளி விலை சரிவு**

கோவை, : தக்காளி விலை கடந்த நவம்பர் மாதம் கிலோ 45 ரூபாயாக இருந்தது. தக்காளியை குளிர் பதன கிடங்கில் இருப்பு வைத்து விற்பனை செய்து வந்தனர். படிப்படியாக விலை குறைந்தது. தற்போது தக்காளி கிலோ 5 ரூபாய் முதல் 8 ரூபாய் வரை விற்பனையாகிறது. மாவட்ட அளவில் 7,200 எக்டரில் தக்காளி பயிர் சாகுபடி செய்யப்பட்டுள்ளது.
நாச்சிபாளையம், கிணத்துக்கடவு மார்க்கெட்டில் தக்காளி விலை நிர்ணயம்

செய்யப்படுகிறது. மதுக்கரை, செட்டிபாளையம், நாச்சிபாளையம், வழுக்குப்பாறை, பிச்சனுார், கிணத்துக்கடவு, பொள்ளாச்சி, தொண்டாமுத்துார், ஆலாந்துறை பகுதியில் தக்காளி விளைச்சல் 3 மடங்கு அதிகரித்துள்ளது. இதனால் விலையும் வெகுவாக குறைந்து வருவதாக தெரியவந்துள்ளது. தை பொங்கல் முடிந்த பின்னர் தக்காளி விலை உயரும் வாய்ப்பிருப்பதாக வியாபாரிகள் தெரிவித்தனர்.

**விவசாயிகள் கலந்துரையாடல்**

நீடாமங்கலம், : நீடாமங்கலம் வேளாண்மை அறிவியல் நிலையத்தில் உழவர்கள் உற்பத்தியாளர்கள் நிறுவனம் அமைத்திட விவசாயிகள் கலந்துரையாடல் கூட்டம் துணை இயக்குனர் வேளாண் வனிகம் மற்றும் விற்பனைதுறை சம்பத்குமார் தலைமையில் நடந்தது. கூட்டத்தில், விவசாயிகள் விதை உற்பத்தி நிறுவனம் மற்றும் குழு அமைத்து விவசாயிகள் உற் பத்தி செய்யும் பொருள்களை மதிப்பு கூட்டி விற்பனை செய்வது தொடர்பாக கலந்துரையாடல் நடந்தது. வேளாண் வணிகர் உழவர்சந்தை முத்துராணி, செண்பகம், உதவி வேளாண்மை அலுவலர்கள் தாமரைச்செல்வம், செந்தில்குமார், கந்தவேல் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டு பேசினர். வலங்கைமான், நீடாமங்கலம் பகுதிகளை சேர்ந்த முன்னோடி விவசாயிகள் 150க்கும் மேற்பட்டவர்கள் கலந்து கொண்டனர்.

**பயிர் இன்சூரன்ஸ் இழப்பீட்டை பொங்கலுக்குள் வழங்க கோரிக்கை**

சிவகங்கை, : பயிர் இன்சூரன்ஸ் இழப்பீட்டை பொங்கலுக்குள் வழங்க வேண்டும் என லெனின் கம்யூனிஸ்ட் கட்சி கோரிக்கைவிடுத்துள்ளது.

சிவகங்கையில் லெனின் கம்யூனிஸ்ட் கட்சியின் தாலுகா கமிட்டி கூட்டம் நடந்தது. பாண்டி தலைமை வகித்தார். மாவட்டத்தலைவர் கருப்புச்சாமி முன் னிலை வகித்தார். தாலுகா குழு உறுப்பினர் கள் கலந்து கொண்டனர்.

கடந்த ஆண்டிற்கான பயிர் இன்சூரன்ஸ் இழப் பீட்டு தொகையை பொங் கல் பண்டிகைக்குள் வழங்க வேண்டும். நதிகளை இணைத்து அ¬னைத்து நதிகளையும் தேசவுடைமையாக்க வேண்டும். சிவகங் கை மாவட்டத்தில் கடும் வறட்சி ஏற்பட்டுள்ளதால் வறட்சி மாவட்டமாக அறிவித்து விவசாயிகளுக்கு ஏக்கருக்கு ரூ.

10 ஆயிரம் வறட்சி நிவார ணம் வழங்க வேண்டும்.
முதியோர் பென்சன் ஆயிரம் ரூபாய் வழங்கப்படுகிறது.
ஆனால் பஞ்சாலை உள்ளிட்ட தொழில் சாலைகளில் வேலை பார் த்து ஓய்வு பெற்ற தொழிலாளர்களுக்கு ரூ. 150ல் இருந்து 500 வரை பென்சன் வழங்கப்படுவதை ஏற்க முடி யாது.
எனவே தொழிலாளர் முதியர் பென்சனை குறைந்தபட்சம் ரூ. 4ஆயிர மாக நிர்ணயம் செய்து வழங்க வேண்டும் என்பது உள்ளிட்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டது.

**சளி, குறட்டையை போக்கும் தும்பைபூ மூலிகை விழிப்புணர்வு முகாமில் தகவல்**

நாகை, ; நாகையில் நடந்த மூலிகை விழிப்புணர்வு முகாமில் தும்பைப்பூவை பல்வேறு வகைகளில் பயன்படுத்தினால் சளி, குறட்டையை போக்கலாம் என்று மூலிகை மருத்துவர் தேவூர் மணிவாசகம் மருத்துவ ஆலோசனை கூறினார்.
நாகை கோட்டைவாசல்படியில் உள்ள வள்ளலார் தெய்வ நிலையத்தில் வள்ளலார் மூலிகை மருத்துவ விழிப்புணர்வு முகாம் நடைபெற்றது. வள்ளலார் தெய்வ நிலைய நிறுவனர் ரவி தலைமை தாங்கினார். மூலிகை மருத்துவர்கள் வீரமணிகண்டன், இளங்கோவன், இளமுருகன் ஆகியோர் முன்னிலை வகித்தனர். தெய்வ நிலைய நிர்வாகி அருணாச்சலம் வரவேற்றார். முகாமை, மூலிகை மருத்துவர் தேவூர் மணிவாசகம் தொடங்கி வைத்து பேசுகையில், குறட்டை நோயை போக்கவல்ல மூலிகை தும்பை பூவாகும். தும்பை பூவை பாலில் கொதிக்க வைத்து குடித்தால் சளி தொல்லை நீங்கும். 50 மில்லி நல்லெண்ணையில் 50 எண்ணிக்கை தும்பைப்பூக்கள் போட்டு கொதிக்க வைத்து வடிகட்டி 21 நாட்கள் தினமும் மூக்கில் மூன்று சொட்டு இட்டு வந்தால் குறட்டை நோய் குணமாகும். 100 மில்லி தேனில் எண்ணிக்கையில்¢ 50 தும்பைப்பூ, 50 நித்தியகல்யாணிப்பூ ஆகிய வற்றை ஊறவைத்து காலை, மாலையில் ஒரு ஸ்பூன் வீதம் சாப்பிட்டு வந்தால் மூக்கில் சதை வளர்ச்சி, தொண்டையில் சதை வளர்ச்சி, கழுத்தில் வரும் காசக் கழலைகள் குணமாக்குவதுடன் குடலில் ஏற்படும் கட்டி, வீக்கம், குணமாகும். மேலும் 20 தும்பைபூவுடன் 5 கிராம் பனை வெல்லம் சேர்த்து சாப்பிட்டு வர கருப்பை கட்டி கரையும் என்று கூறினார். நிலைய காப்பாளர் சிவநேசன் நன்றி கூறினார்.

**காரைக்கால் வேளாண் மையத்தில் பல்வேறு மரக்கன்று விற்பனை துவக்கம்**

காரைக்கால், : காரைக்கால் வேளாண் அறிவியல் நிலையத்தில், பழ மரக்கன்றுகள், பூ, அலங்கார மரக்கன்றுகள் விற்பனை தொடங்கியது.
இது குறித்து, காரைக்கால் வேளாண் அறிவியல் நிலைய தலைவர் சுரேஷ் கூறியது, காரைக்கால் வேளாண் அறிவியல் நிலையத்தில் பல்வேறு விற்பனை பிரிவு தொடங்கப்பட்டுள்ளது. குறிப்பாக, மீன், முயல், காய்கறி, உரம், போன்ற விற்பனை பிரிவுகள் தொடங்கப்பட்டு சிறப்பாக செயல்பட்டு வருகிறது.
அதேபோல், உரம், சமையல் மசாலா, ஊறுக்காய், கைவினை, அலங்கார பொருட்கள் செய்முறை பயிற்சியும் சிறப்பாக செயல்பட்டு வருகிறது.
அடுத்தகட்டமாக, அறிவியல் நிலையத்தின் தோட்டக்கலை சார்பில், மாதுளை, கொய்யா, எலுமிச்சை, சப்போட்டா, ஆரஞ்சு, தென்னை, ரோஜா, கிறிஸ்துமஸ் மரம், பூ, அலங்கார செடி வகைகள் விற்பனை தொடங்கப்பட்டுள்ளது. ரூ.15 முதல் ரூ.60 வரையில் இவ்வகை செடிகள் விற்பனை செய்யப்பட்டு வருகிறது.
விவசாயிகள் அதிக அளவில் வாங்கிச்செல்வதால் அதிக அளவில் உற்பத்தி செய்யப்பட்டு வருகிறது. குறிப்பாக, சிறிய அளவிலான செடிகளிலேயே காய்கள் முளைப்பதால், விற்பனை சூடுபிடிக்கத் தொடங்கியுள்ளது என்றார். நிலைய முதல்வர் ராஜேந்திரன், தோட்டக்கலை நிபுணர்கள் கலந்துகொண்டனர்.

**எண்ணைப்பனை விவசாயத்திற்கு மானியம்**

கரூர், : கரூர் மாவட்டத்தில் சுமார் 300ஏக்கரில் எண்ணைப்பனை சாகுபடி செய்யப்பட்டுள்ளது. இவை 30ஆண்டு பயிர். தொடர்ந்து மகசூல் கொடுக்கும். இதன்மூலம் மாதந்தோறும் வருவாய் பெறலாம். தற்போது எண்ணை பனைக்கு மானியம் வழங்கப்படுகிறது. ஒரு எக்டேருக்கு ரூ.10ஆயிரம் மதிப்புள்ள மரக்கன்றுகள் மானியமாக வழங்கப்படுகிறது. மேலும் நடவு மானியமாக ஒருஎக்டேருக்கு ரூ.6ஆயிரம் வழங்கப்படுகிறது. சொட்டு நீர்பாசனமாக இருந்தால் ரூ.10ஆயிரம் வழங்கப்படுகிறது. ஊடுபயிர் சாகுபடிக்கு என ரூ.5ஆயிரம், உர நிர்வாகம் மற்றும் பயிர்பாதுகாப்புக்கு ரூ.5ஆயிரம், மண்புழு உரக்குழி

தொட்டிகட்டுவதற்கு ரூ.15ஆயிரம் மானியம் வழங்கப்படுகிறது. மேற்கண்ட தகவலை வேளாண்மை உதவிஇயக்குனர் பாலகிருஷ்ணன் தெரிவித்துள்ளார்.

**உப்பாறு அணைக்கு தண்ணீர் திறக்க வேண்டும்**

உடுமலை,: திருமூர்த்தி அணையில் இருந்து பாசனத்திற்காக பிஏபி வாய்க்காலில் தண்ணீர் திறந்து விடப்பட்டு வருகிறது.அரசூர் பகுதியில் ஷட்டர் அமைந்துள்ளது. மழை மற்றும் வெள்ளஅபாயத்தின் போது அரசூர் ஷட்டர் மூலம் பொதுப்பணித்துறை அதிகாரிகள் தண்ணீர் திறந்து விடுவது வழக்கம்.
இத்தண்ணீர் உப்பாறு அணையின் ஓடைப்பகுதியில் தண்ணீர் செல்லும். இதன் கரைகளில் 4 ஆயிரம் ஏக்கர் விவசாய நிலம் உள்ளது. விவசாயிகளின் கோரிக்கைக்கு ஏற்பட அவ்வப்போது குடிநீர் தேவை, கால்நடை மற்றும் விவசாயத்திற்காக தண்ணீர் திறந்து விடப்படும். ஓடை பகுதிகளில் ஆங்காங்கே ஏற்படுத்தப்பட்ட தடுப்பணைகள் மூலம் தண்ணீர் தேக்கி வைக்கப்பட்டு பயன்படுத்தப்பட்டு வந்தது.
கடந்த 3 ஆண்டுகளாக போதுமான மழை இல்லாத காரணத்தால் ஆயிரத்திற்கும் மேற்பட்ட தென்னைகள், காய்கறி பயிர்கள் காய்ந்து கருகியது.
தற்போது கால்நடைகளுக்கு குடிநீர் தட்டுப்பாடும் நிலவி வருகிறது.
விவசாயிகள், விவசாய கூலித் தொழிலாளிகள், கால்நடைகள் மற்றும் கருகி வரும் காய்கறி பயிர்களை காப்பாற்ற உடனடியாக உப்பாறு அணைக்கு உயிர் தண்ணீர் திறந்து விட வேண்டும் என தமிழக முதல்வருக்கு விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

**வரத்து அதிகரிப்பால் தக்காளி ரூ5க்கு விற்பனை விவசாயிகள் கவலை**

நாமகிரிப்பேட்டை, : விளைச்சல் அதிகரிப்பு மற்றும் வரத்து அதிகரிப்பால் நாமகிரிப்பேட்டை மெட்டாலாவில் தக்காளி விலை ரூ.5 ஆக குறைந்துள்ளது. இதனால், விவசாயிகள் கவலையில் ஆழ்ந்துள்ளனர்.
நாமக்கல் மாவட்டம் நாமகிரிப்பேட்டை அடுத்த மெட்டாலாவில் தினசரி காய்கறி மார்க்கெட் நடக்கிறது. இங்கு சுற்றுப்பகுதிகளைச் சேர்ந்த மூலப்பள்ளிப்பட்டி, நாமகிரிப் பேட்டை, கார்கூடல்பட்டி, கப்பலுத்து, மங்களபுரம், உரம்பு ஆகிய

இடங்களில் இருந்து விவசாயிகள் காய்கறிகளை விற்பனைக்கு கொண்டு வருகின்றனர். மெட்டாலா காய்கறி மண்டிகளில் நடக்கும் ஏலத்தின் மூலம் காய்கறிகளை வியாபாரிகளுக்கு விற்பனை செய்கின்றனர். நேற்றைய காய்கறி விலை விவரம் வருமாறு:

பெங்களூர் தக்காளி கிலோ ரூ.5க்கும், நாட்டுத்தக்காளி ரூ.7, கத்தரிக்காய் கிலோ ரூ.14 வரை விற்பனையானது. வெண்டைக்காய் கிலோ ரூ.20, பச்சைமிளகாய் ரூ.16, அவரைக்காய் ரூ.30, பாகற்காய் ரூ.20, முள்ளங்கி ரூ.6, வெங்காயம் கிலோ ரூ.20, பீர்க்கன்காய் கிலோ ரூ.20, புடலை ரூ.18க்கு விற்பனையானது. பூசணி ரூ.7, நீர்பூசணி ரூ.5க்கும் விற்பனையானது. சுரைக்காய் கிலோ ரூ.5க்கும் பீட்ரூட் ரூ.16க்கும், மாங்காய் ரூ.25, சீத்தாபழம் ரூ.15க்கும், வாழைப்பழம் கிலோ ரூ.35 க்கும் தேங்காய் ரூ.16 வரை விற்பனையானது.

நேற்று, மெட்டாலாவில் தக்காளி விலை ரூ.5ஆக விலை குறைந்தது. நேற்று முன்தினத்தை விட கிலோவுக்கு ரூ.3 வரை குறைந்துள்ளது. இதனால் விவசாயிகள் பெரிதும் கவலையடைந்துள்ளனர்.

**தக்காளி விலை தொடர் சரிவு**

சேலம், :தக்காளி வரத்து அதிகரிப்பால் விலை தொடர்ந்து சரிந்து, தற்போது கிலோ ரூ8க்கு விற்பனை செய்யப்படுகிறது. சேலம் மார்க்கெட்டிற்கு ஆத்தூர், அரூர், அயோத்தியாப்பட்டணம் ஆகிய இடங்களில் இருந்து நாட்டு தக்காளியும், வலசையூர், சுக்கம்பட்டி ஆகிய இடங்களில் இருந்து ஒட்டுவீரிய வகை தக்காளி மற்றும் பெங்களூரில் இருந்தும் தக்காளி விற்பனைக்கு வருகிறது. மார்கழி, தை, மாசி ஆகிய மாதங்கள் தக்காளி சீசன் ஆகும். தற்போது நல்ல பனிப்பொழிவு இருப்பதால் தக்காளி விளைச்சல் அதிகரித்து, மார்க்கெட்டிற்கும் வரத்து அதிகரித்துள்ளது. இதையடுத்து விலை சரிந்துள்ளது. ஒரு கிலோ ரூ40க்கு விற்பனையான ஒட்டுவீரிய வகை தக்காளி தற்போது ரூ15க்கும், ரூ40க்கு விற்பனையான பெங்களூர் தக்காளி ரூ30க்கும், ரூ30க்கு விற்பனையான நாட்டு தக்காளி ரூ8க்கும் விற்பனை செய்யப்படுகிறது. இது குறித்து வியாபாரிகள் கூறுகையில், 'இரண்டு மாதங்களுக்கு முன் ஒரு கிலோ தக்காளி ரூ50க்கு விற்பனை செய்யப்பட்டது. பின்பு படிப்படியாக விலை குறைந்து தற்போது ஒரு கிலோ

தக்காளி ரூ8க்கு விற்பனை செய்யப்படுகிறது. மாசி மாதம் முடியும் வரை தக்காளி இதே விலையில் விற்பனை ஆகும். மாசி மாதத்திற்கு பின்னர் தக்காளி சீசன் முடிவதால் விலை அதிகரிக்கும்' என்றனர்.

**நிலக்கடலை பாசனத்திற்கு கீழ்பவானி வாய்க்காலில் தண்ணீர் திறக்க வேண்டும்**

ஈரோடு, : தமிழக விவசாயிகள் சங்கத்தின் ஈரோடு மாவட்ட கூட்டம் ஈரோட்டில் உள்ள சங்க அலுவலகத்தில் நடந்தது. சங்கத்தின் தலைவர் குமாரசாமி தலைமை தாங்கினார். கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள்:

கீழ்பவானி பாசன திட்டத்தில் இரண்டாம் மண்டலத்திற்கு கடந்த 3 ஆண்டுகளாக தண்ணீர் திறக்கப்படவில்லை. தற்போது அணையிலும், மின் அணைகளிலும் 18 டி.எம்.சி. தண்ணீர் உள்ளது. இதை கொண்டு நிலக்கடலை பாசனத்திற்கு தண்ணீர் திறக்க நடவடிக்கை எடுக்க வேண்டும், கீழ்பவானி பாசன பகுதியில் நெல் அறுவடை துவங்கி விட்டதால் கடந்த ஆண்டு அமைக்கப்பட்ட அனைத்து இடங்களிலும் உடனடியாக நெல் கொள்முதல் நிலையங்கள் துவக்கப்பட வேண்டும், கரும்பு விவசாயிகளுக்கு நியாயமான விலை கிடைத்திட சர்க்கரை இறக்குமதியை தடை செய்வதுடன் உடனடியாக சர்க்கரையை ஏற்றுமதி செய்ய நிலையான கொள்கை முடிவு எடுக்க வேண்டும்.

பெட்ரோல் இறக்குமதியை குறைத்து அந்நிய செலவாணியை சேமிக்க பெட்ரோலில் எத்தனால் கலப்பதை கட்டாயப்படுத்தி கரும்பில் இருந்து நேரடியாக எத்தனாலை தயாரிக்க மத்திய அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும், கரும்பு வெட்டுக்கூலியை ஆலைகளே ஏற்றுக் கொண்டு வயல்வெளி விலையாக கரும்புக்கு விலை நிர்ணயம் செய்ய வேண்டும் என்று பல ஆண்டுகளாக கோரிக்கை விடுக்கப்பட்டு வருகிறது. ஆலைகளே கரும்புக்கான வெட்டுக்கூலியை ஏற்றுக் கொள்ள உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும், பால் விற்பனை விலையை கொள்முதல் விலைக்கு மேல் உயர்த்த வேண்டும் என்பன உட்பட பல்வேறு கோரிக்கை தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டது.

இந்நிகழ்ச்சியில் மாநில தலைவர் ரத்தினசாமி, மாவட்ட செயலாளர் சுப்பு, பொருளாளர் லட்சுமணன், பெரியசாமி, லோகுசாமி உள்பட பலர் கலந்து கொண்டனர்.

**ஆடுதுறையில் மண்டல வேளாண் பெருவிழா 10ம் தேதி நடக்கிறது**

திருவிடைமருதூர், : தஞ்சாவூர் மாவட்டம் ஆடுதுறையில் உள்ள தமிழ்நாடு நெல் ஆராய்ச்சி நிலையத்தில் மண்டல வேளாண் பெருவிழா வரும் 10ம் தேதி நடக்கிறது.

விழாவில் வேளாண்மைத்துறை அமைச்சர், வீட்டு வசதித்துறை அமைச்சர், துணை வேந்தர் மற்றும் தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக்கழக விஞ்ஞானிகள், வேளாண்துறை செயலர், இயக்குனர், நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள் மற்றும் பலர் கலந்து கொள்கின்றனர்.

அன்று காலை 11.30 மணிக்கு வேளாண் விஞ்ஞானிகள் பங்குபெறும் பயிர் உற்பத்தி சம்மந்தமான தொழில்நுட்ப கருத்தரங்கம், மதியம் 2 மணிக்கு வேளாண் சார்ந்த அனைத்துத்துறை அலுவலர்கள் பங்குபெறும் பல்துறை கலந்துரையாடல், 4 மணிக்கு விஞ்ஞானிகளுடன் உழவர்கள் கலந்துரையாடல் கருத்தரங்கம் நடக்கிறது. இதில் தஞ்சாவூர், திருச்சி, நாகை, திருவாரூர், அரியலூர், கடலூர், புதுக்கோட்டை, பெரம்பலூர், திருவள்ளூர், வேலூர், விழுப்புரம், திருவண்ணாமலை, காஞ்சிபுரம் மாவட்டங்களிலிருந்து 2 ஆயிரத்துக் கும் மேற்பட்ட விவசாயிகள் பங்கேற்கின்றனர்.

வேளாண் உற்பத்தியை அதிகரிக்க புதிய தொழில்நுட்பங்கள் பற்றிய கண் காட்சி, செயல்விளக்கம், கருத்தரங்கு மற்றும் உழவர்களின் கலந்துரையாடல் நிகழ்ச்சிகள் நடக்கி றது. விழாவில் விவசாயிகள் பங் கேற்று வாய்ப்பை பயன்படுத்தி கொள்ள வேண்டும்.இவ்வாறு ஆடு துறை நெல் ஆராய்ச்சி நிலைய இயக்குனர் முனை வர் ராஜேந்திரன் தெரிவித்துள்ளார்.

## இன்றைய வேளாண் செய்திகள்

**தேசிய பயிர் காப்பீட்டு திட்டத்தை மாநில அரசுகளுடன் கலந்து ஆலோசிக்காமல் அவசர, அவசரமாக அமல்படுத்துவதா? மத்திய அரசுக்கு ஜெயலலிதா கண்டனம்**



சென்னை

தேசிய பயிர் காப்பீட்டு திட்டத்தை மாநில அரசுகளுடன் கலந்து ஆலோசிக்காமல் அவசர, அவசரமாக அமல்படுத்துவதற்கு முதல்–அமைச்சர் ஜெயலலிதா அதிருப்தி தெரிவித்து உள்ளார். இது தொடர்பாக அவர் பிரதமருக்கு கடிதம் அனுப்பி இருக்கிறார்.

இதுகுறித்து முதல்–அமைச்சர் ஜெயலலிதா, பிரதமர் மன்மோகன்சிங்குக்கு எழுதியுள்ள கடிதத்தில் கூறியிருப்பதாவது:–

<u>விவசாயிகள் மத்தியில் அதிர்ச்சி</u>

தேசிய வேளாண் காப்பீட்டு திட்டத்திற்கு பதிலாக, திருத்தியமைக்கப்பட்ட தேசிய பயிர் காப்பீட்டு திட்டம் எனவும், பருவநிலை அடிப்படையிலான பயிர் காப்பீட்டு திட்டம் எனவும் மத்திய அரசு புதிய தேசிய பயிர் காப்பீட்டு திட்டத்தை,

சம்பந்தப்பட்ட மாநில அரசுகளுடன் உரிய ஆலோசனை நடத்தாமல், எதிர்பாராத வகையில் திடீரென்று அறிமுகப்படுத்தி இருப்பது, விவசாயிகள் மத்தியில் திடுக்கிடும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

வேளாண் காப்பீட்டு பிரிமியம் தொகைக்கு மேலாக மத்திய அரசு பயிர் இழப்பீட்டு தொகையில் 50 சதவீதத்தை அளிக்கும் நிலையில், தமிழகத்தைச்சேர்ந்த விவசாயிகளுக்கு 45 முதல் 50 சதவீதம் பிரிமியம் தொகையை மானியமாக, மாநில அரசு வழங்கி வரும் நிலையில், மத்திய அரசின் திருத்தியமைக்கப்பட்ட பயிர் காப்பீட்டு திட்டம், குறிப்பாக தமிழகத்திற்கு மிகுந்த அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

<u>மனவேதனையுடன் எழுதுகிறேன்</u>

புதிய காப்பீட்டு திட்டத்தின் கீழ் பயிர்களுக்கான பிரிமியம் தொகை வெகுவாக உயர்ந்திருப்பதால், தமிழகத்தைச் சேர்ந்த விவசாயிகளுக்கு மிகப்பெரிய நிதிச்சுமை ஏற்படும் என்றும், எனவே, விவசாயிகளின் நலனை கருத்தில் கொண்டு, மிகுந்த மனவேதனையுடன் எழுதுகிறேன். பருவநிலை பாதிக்கப்படும்போது, லட்சக்கணக்கான விவசாயிகள் தங்களது சிரமங்களை எதிர்கொள்வதற்கு உள்ள ஒரே திட்டமாக பயிர் காப்பீட்டு திட்டம் உள்ளது.

எனவே, தமது தலைமையிலான அரசு, பயிர் காப்பீட்டு திட்டத்தில் அதிக எண்ணிக்கையிலான விவசாயிகள் பதிவு செய்வதை ஊக்குவிக்கும் வகையில், தேசிய வேளாண் காப்பீட்டு திட்டத்தின் கீழ், அவர்களுக்கான காப்பீட்டு பிரிமியம் தொகையில் 45 முதல் 50 சதவீதம் வரை அளவு தொகையை மானியமாக தமிழக அரசு அளித்து வருகிறது. இதன் விளைவாக, தேசிய பயிர் காப்பீட்டு திட்டத்தின்கீழ், கடந்த 2000–2001–ம் ஆண்டு, ஒரு லட்சத்து ஆயிரம் விவசாயிகள் காப்பீடு செய்திருந்த நிலை மாறி, 2012–2013–ம் ஆண்டில், 9 லட்சத்து 76 ஆயிரம் விவசாயிகளாக அதிகரித்துள்ளது.

<u>மாநில அரசிடம் கருத்து கேட்கவில்லை</u>

தேசிய பயிர்காப்பீட்டு திட்டமானது அதனுடன் தொடர்புடைய மாநில அரசுகளுடன் கலந்தாலோசிக்காமல், அவசர, அவசரமாக மத்திய அரசால் அறிமுகப்படுத்தப்பட்டதையும் தாம் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். 2013–2014–ம் ஆண்டு ரபி பருவம் தொடங்கி ஒரு மாதத்திற்கு பிறகு, அதாவது, 2013–ம் ஆண்டு நவம்பர் முதல் தேதியிலிருந்தே மத்திய அரசு தேசிய பயிர்காப்பீட்டு திட்டத்தை அறிமுகப்படுத்துவதற்கான நிர்வாக அறிவுறுத்தல்களை வெளியிட்டது.

இந்த காப்பீட்டு திட்டம் அறிமுகப்படுத்தியபோது, மாநில அரசுகள் மற்றும் விவசாயிகளிடம் கருத்து கேட்கப்படவில்லை. தேசிய பயிர்காப்பீட்டு திட்டத்தால் விவசாயிகளுக்கான பிரிமியம் தொகை அதிகரித்துள்ளதோடு, தமிழக விவசாயிகளுக்கு பல்வேறு வகையான சுமை ஏற்பட்டுள்ளது. பயிர் மற்றும் பருவகாலத்தை பொறுத்து, காப்பீடு செய்யப்படும் தொகையில் 2 முதல் 3.5 சதவீத பிரிமியம் தொகை அளிப்பதையே, தேசிய வேளாண் காப்பீட்டு திட்ட விதிமுறைகள் உறுதிசெய்கின்றன.

<u>ஆபத்தான சூழ்நிலை</u>

விவசாயிகள், காப்பீடு செய்யப்படும் தொகையில், 50 சதவீத பிரிமியம் தொகையை தமிழக அரசு மானியமாக வழங்குவதால், அவர்கள் எஞ்சிய 1 சதவீதம் முதல் 1.75 சதவீதம் பிரிமியம் தொகையை செலுத்த வேண்டியிருந்தது. ஆனால், புதிய தேசிய பயிர்காப்பீட்டு திட்டத்தின்படி, விவசாயிகள் 3.75 சதவீதம் முதல் 4.8 சதவீதம் மற்றும் திருத்தியமைக்கப்பட்ட காப்பீட்டு திட்டத்தின்படி அதற்கு மேலும் பிரிமியம் தொகை செலுத்த வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.

இதுபோன்ற அதிக பிரிமியம் தொகை செலுத்த வேண்டி வருமானால், ஏற்கனவே பருவ நிலை ஆபத்து உள்ள சூழ்நிலையில் பயிர் காப்பீட்டினை விவசாயிகள் மேற்கொள்வார்களா? என நான் சந்தேகிக்கிறேன்.

விவசாயிகள் ஊக்குவிப்பு

இந்த ஆண்டு வடகிழக்கு பருவமழை 33 சதவீதம் அளவுக்கு குறைவாக பெய்துள்ளதாலும், 2012–13–ம் ஆண்டில் கடுமையான வறட்சி நிலவியதாலும் ஏற்கனவே கடும் சிரமங்களை எதிர்கொண்டுள்ளன. தமிழக விவசாயிகள், இதுபோன்ற கூடுதல் காப்பீட்டு பிரிமியம் சுமையால், மேலும் பாதிப்புக்கு ஆளாவார்கள். இந்த சூழ்நிலையில், பயிர் காப்பீட்டு திட்ட பிரிமியம் தொகை உயர்வை தமது அரசு ஏற்றுக்கொள்ளாது. எனவே, தேசிய பயிர் காப்பீட்டு திட்டத்தின் கீழ் காப்பீடு செய்யப்படும் தொகைக்கான பிரிமியம் தொகை, 2 சதவீதம் அல்லது அதற்குமேல் கூடுதலாகும் போது, அந்த சுமையை விவசாயிகளின் மீது சுமத்தாமல், மத்திய அரசும், மாநில அரசும் சமமாக பகிர்ந்து செலுத்தலாம் என தாம் யோசனை தெரிவிக்கிறேன்.

இதன்மூலம், பயிர் காப்பீட்டு திட்டத்தின் கீழ் வரும் அதிக அளவிலான விவசாயிகளை ஊக்குவிக்க வழிவகை ஏற்படும் மேலும், நீண்டகால அடிப்படையில் வேளாண் செயல்பாடுகளை விவசாயிகள் தொடர்வதற்கும், பயிர் இழப்பீட்டை அவர்கள் எதிர்கொள்வதற்கும் இது ஏதுவாகும்.

பிரதமர் தலையிட்டு முடிவு

எனவே, நடப்பு 2013–14–ம் ஆண்டு ரபி பருவத்தில் இருந்தே, தேசிய பயிர் காப்பீட்டு திட்டத்தின்கீழ் காப்பீடு செய்யும் தமிழகத்தைச் சேர்ந்த விவசாயிகளுக்கான பிரிமியம் தொகையில், அதிகரிக்கப்பட்டுள்ள 2 சதவீதத்திற்கு மேற்பட்ட பிரிமியம் தொகையை மத்திய–மாநில அரசுகள் பகிர்ந்து கொள்ள வேண்டும் என்ற தமது யோசனை குறித்து, பிரதமர் தனிப்பட்ட முறையில் தலையிட்டு விரைந்து முடிவெடுக்க வேண்டும்.

இவ்வாறு முதல்–அமைச்சர் ஜெயலலிதா, பிரதமருக்கு எழுதிய கடிதத்தில் கூறி உள்ளார்.

**தமிழ்நாட்டுக்கு காவிரியில் இருந்து ஆண்டுதோறும் கூடுதலாக 65 டி.எம்.சி. தண்ணீர் வழங்க வேண்டும் கர்நாடக அரசுக்கு உத்தரவிடுமாறு சுப்ரீம் கோர்ட்டில் தமிழக அரசு மனு**



புதுடெல்லி,

காவிரி தண்ணீரை பகிர்ந்துகொள்வதில் தமிழகத்திற்கும் கர்நாடக மாநிலத்திற்கும் இடையே நீண்ட காலமாக பிரச்சினை இருந்து வருகிறது.

**சுப்ரீம் கோர்ட்டில் மனு**

இந்த பிரச்சினைக்கு தீர்வு காண்பதற்காக அமைக்கப்பட்ட காவிரி நடுவர் மன்றம், கடந்த 2007–ம் ஆண்டில் தனது இறுதி தீர்ப்பை வழங்கியது. அதன்படி, ஆண்டு தோறும் தமிழகத்துக்கு 192 டிஎம்சி தண்ணீரை காவிரியிலிருந்து திறந்துவிட வேண்டுமென கர்நாடக அரசுக்கு உத்தரவு பிறப்பிக்கப்பட்டிருந்தது.பாசன நிலம் குறித்த தவறான கணக்கீட்டின் அடிப்படையில் இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டு இருப்பதாக சுட்டிக்காட்டி, தமிழக அரசு சார்பில் சுப்ரீம் கோர்ட்டில் புதிய அறிக்கை ஒன்று தாக்கல் செய்யப்பட்டு உள்ளது. அதில் கூறப்பட்டு இருப்பதாவது–

<u>கூடுதலாக 65 டி.எம்.சி.</u>

''தமிழகத்தில் 24 லட்சம் ஏக்கர் பரப்பிலான விளைநிலங்களுக்கு 192 டிஎம்சி தண்ணீரை திறந்துவிட வேண்டுமென காவிரி நடுவர் மன்றம் கணக்கிட்டிருந்தது. ஆனால் அது தவறான கணக்கீடு ஆகும். தமிழகத்தில் டெல்டா பகுதிகளில் 29 லட்சம் ஏக்கர் பரப்பளவில் விளைநிலங்கள் உள்ளன. அதனைக் குறைத்து மதிப்பீடு செய்துள்ளனர்.

எனவே, உண்மை நிலவரப்படி 29 லட்சம் ஏக்கர் விளைநிலங்களுக்கு கணக்கிட்டு, கூடுதலாக ஆண்டு தோறும் சுமார் 65 டிஎம்சி தண்ணீரை வழங்க கர்நாடகத்துக்கு உத்தரவு பிறப்பிக்க வேண்டும். அதேபோல், கர்நாடகத்தில் மொத்தம் 6 லட்சம் ஏக்கர் விளைநிலங்கள் இருப்பதாகவும் ஆனால் அதனை 18 லட்சம் ஏக்கராக அளவிட்டு இருக்கிறார்கள். இந்த மதிப்பீட்டை குறைக்க வேண்டும்.

<u>2–வது பருவ பாசனத்துக்கும்</u>

அடிப்படை விதிகளின்படி சமச்சீரான நதிநீர்ப்பங்கீடு குறித்த 11 அளவீடுகள் வரையறுக்கப்பட்டுள்ளன. கர்நாடகா மற்றும் கேரளா ஆகிய இரு மாநிலங்களுக்கும் காவிரியைத் தவிர வேறு பல நதிநீர்ப்படுகைகள் உள்ளன. ஆனால் தமிழகத்தின் பல லட்சக்கணக்கான மக்களுக்கு காவிரி நதி ஒன்றுதான் பாசனத்துக்கும் குடிநீருக்கும் வழிவகுக்கும் ஒரே நதியாகும்.பல நூற்றாண்டுகளாக தமிழகத்துக்கு உரிமை கொண்ட இந்த நதியை தண்ணீர் தட்டுப்பாட்டைக் காரணமாக வைத்து தமிழகத்தில் ஒரே ஒரு பருவப் பயிருக்கு மட்டுமே பாசனம் செய்யும் வகையில் தண்ணீர் திறந்து விட நடுவர் மன்றம் உத்தரவிட்டுள்ளது. இந்த உத்தரவில் மாற்றம் செய்து, தமிழகத்தில் 2–வது பருவப்பயிர் பாசனத்துக்கு உதவும் வகையிலும் தண்ணீரைத் திறந்து விட உத்தரவிடவேண்டும்''.இவ்வாறு அந்த அறிக்கையில் கூறப்பட்டு உள்ளது.இந்த அறிக்கை மீதான விசாரணை வருகிற 15–ந்தேதி நடைபெறும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

## திருமூர்த்தி அணை இன்று திறப்பு ஜெயலலிதா உத்தரவு



சென்னை,

பாசனத்திற்காக தண்ணீர் திறந்துவிடுமாறு விவசாயிகள் விடுத்த கோரிக்கையை ஏற்று திருமூர்த்தி அணையை இன்று (செவ்வாய்கிழமை) திறக்க முதல்–அமைச்சர் ஜெயலலிதா உத்தரவு பிறப்பித்துள்ளார்.

முதல்–அமைச்சர் ஜெயலலிதா வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது:–

**விவசாயிகள் கோரிக்கை**

திருப்பூர் மாவட்டம், திருமூர்த்தி அணையிலிருந்து பரம்பிக்குளம் பிரதான கால்வாய், உடுமலைப்பேட்டை கால்வாய் மற்றும் உயர்மட்டக் கால்வாய் வாயிலாக முதலாம் மண்டல பாசன பகுதிகளுக்கு பாசனத்திற்காக தண்ணீர் திறந்துவிடுமாறு வேளாண் பெருங்குடி மக்களிடமிருந்து எனக்கு கோரிக்கைகள் வந்துள்ளன.வேளாண் பெருமக்களின் வேண்டுகோளினை ஏற்று, திருப்பூர் மற்றும் கோயம்புத்தூர் மாவட்டங்களில் உள்ள பரம்பிக்குளம் பிரதான கால்வாய், உடுமலைப்பேட்டை கால்வாய் மற்றும் உயர்மட்டக் கால்வாய் வாயிலாக இடைவெளிவிட்டு பாசனத்திற்காக இன்று (செவ்வாய்கிழமை) முதல் தண்ணீர் திறந்துவிட நான் ஆணையிட்டுள்ளேன்.

**பாசன வசதி பெறும்**

இதனால், திருப்பூர் மற்றும் கோயம்புத்தூர் மாவட்டங்களில் உள்ள 94, 521 ஏக்கர் நிலங்கள் பாசன வசதி பெறும் என்பதை நான் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.இவ்வாறு முதல்–அமைச்சர் ஜெயலலிதா கூறி உள்ளார்.

**காற்றழுத்த தாழ்வு மண்டலம் வலு இழந்தாலும் தென் கடலோர மாவட்டங்களில் பரவலாக இன்று மழை பெய்யும் சென்னை வானிலை ஆய்வு மையம் தகவல்**




சென்னை

தென்மேற்கு வங்க கடலில் உருவான காற்றழுத்த தாழ்வு மண்டலம் வலு இழந்தபோதும், தென் கடலோர மாவட்டங்களில் பரவலாக இன்று (செவ்வாய்க்கிழமை) மழை பெய்யும் என்று சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

இது தொடர்பாக சென்னை வானிலை ஆய்வு மைய இயக்குனர்களின் ஒருவரான எஸ்.ஆர்.ரமணன் நேற்று நிருபர்களிடம் கூறியதாவது:–

வலு குன்றியது

தென் மேற்கு வங்க கடலில் நேற்று(நேற்று முன்தினம்) உருவான குறைந்த காற்றழுத்த தாழ்வு மண்டலம், இன்று(நேற்று) காலை 8.30 மணி நிலவரப்படி இலங்கையின் கிழக்கு கடற்கரை பகுதியில் நிலை கொண்டுள்ளது. இந்த

காற்றழுத்த தாழ்வு மண்டலம் இன்னும் சில மணி நேரங்களில் இலங்கையை கடந்து வலு குன்றிய நிலையில் மன்னார் வளைகுடாவை நோக்கி நகரும்.

இதனால், தமிழகத்தில் கடந்த 24 மணி நேரம் நிலவி வந்த வறண்ட நிலை மாறி, அடுத்த 24 மணி நேரத்தில் வட கடலோர மாவட்டங்களில் ஒரு சில இடங்களிலும், தென் கடலோர மாவட்டங்களில் அனேக இடங்களிலும் மழை பெய்யக்கூடும்.

கடலுக்குள் செல்ல வேண்டாம்

டெல்டா பகுதி மாவட்டங்கள், தென் மாவட்டங்களில் ஒருசில இடங்களில் கனமழை பெய்யக்கூடும்.

கடல் கொந்தளிப்பாக காணப்படும். எனவே தென் கடலோர மாவட்ட மீனவர்கள் கடலுக்குள் மீன்பிடிக்க செல்ல வேண்டாம். மேலும் வட கடலோர மாவட்ட மீனவர்கள் கவனமாக மீன்பிடிக்க செல்லவேண்டும் என்று அறிவுறுத்தப்படுகிறார்கள்.

இவ்வாறு அவர் கூறினார்.

**நம்பியூர் பகுதியில் மழை பொய்த்ததால் எலத்தூர் ஏரி வறண்டது நெல்பயிர்கள் கருகும் அபாயம்**



கோபிசெட்டிபாளையம்,

நம்பியூர் பகுதியில் மழை பெய்யாததால் எலத்தூர் ஏரி வறண்டு கிடக்கிறது. இதனால் தண்ணீர் இன்று நெல்பயிர்கள் கருகும் அபாயத்தில் உள்ளன.

## எலத்தூர் ஏரி

நம்பியூர் அருகே எலத்தூர் ஏரி உள்ளது. இந்த ஏரிக்கு நம்பியூர் மற்றும் அதன்சுற்றுவட்டார பகுதியில் மழை பெய்யும் போது தண்ணீர் வரும். சுமார் 100 ஏக்கர் பரப்பளவு கொண்ட இந்த ஏரி மூலம் நூற்றுக்கணக்கான ஏக்கர் விவசாய நிலங்கள் பாசன வசதி பெறுகிறது.

எலத்தூர் பாசன பகுதியில் உள்ள விவசாய நிலங்களில் நெல், வாழை, மக்காச்சோளம், மஞ்சள் உள்ளிட்ட பயிர்கள் சாகுபடி செய்யப்படுகிறது. கடந்த சில ஆண்டுகளுக்கு முன்பு நம்பியூர் பகுதியில் கனமழை பெய்தபோது ஏரி முழுவதுமாக நிரம்பியது. அதன்பின்னர் மழை பெய்யாததால் ஏரி தண்ணீர் இன்றி வறண்டு காணப்படுகிறது.

## பயிர்கள் கருகும் அபாயம்

எலத்தூர் மற்றும் அதன் சுற்றுவட்டார பகுதியை சேர்ந்த விவசாயிகள் ஏரியில் தண்ணீர் இல்லாததால் கிணற்று பாசனம் மற்றும் ஆழ்துளை கிணற்று பாசனத்தை பயன்படுத்தி விவசாயம் செய்து வருகிறார்கள். வறட்சி காரணமாக நிலத்தடி நீர்மட்டமும் குறைந்தது. இதனால் விவசாய பயிர்கள் தண்ணீர் இன்றி கருகும் அபாயம் உள்ளது.

எலத்தூர் அருகே சாணார்புதூர், ஆண்டிபாளையம், வெட்டையம்பாளையம், கரட்டுப்பாளையம், ஊஞ்சப்பாளையம் ஆகிய கிராமங்கள் கீழ்பவானி வாய்க்கால் பாசன பகுதிகளாகும். ஆனால் எலத்தூர், தெற்குபதி, செம்மாண்டம்பதி, நாச்சிபாளையம் மற்றும் சுற்றுவட்டார பகுதிகளை சேர்ந்த விவசாயிகள் எலத்தூர் ஏரியை மட்டுமே நம்பி உள்ளனர். எனவே கருகும் நிலையில் உள்ள நெல்பயிர்களை காப்பாற்ற விவசாயிகள் மழை பெய்யவேண்டி எதிர்பார்த்து கொண்டு இருக்கிறார்கள்.

**பட்டிவீரன்பட்டி பகுதியில், பருவமழை பொய்த்ததால் 15 ஆயிரம் ஏக்கரில் நெல் விவசாயம் பாதிப்பு**



பட்டிவீரன்பட்டி பகுதிகளில் பருவமழை பொய்த்து போனதால், 15 ஆயிரம் ஏக்கர் பரப்பளவில் நெல் விவசாயம் பாதிக்கப்பட்டுள்ளது.

## 15 ஆயிரம் ஏக்கர்

திண்டுக்கல் மாவட்டம் பட்டிவீரன்பட்டி, அய்யம்பாளையம், சித்தரேவு, அய்யன்கோட்டை, சித்தையன்கோட்டை பகுதிகளில் டிசம்பர், ஜனவரி மாதங்களில் நெல் அறுவடை பணிகள் மும்முரமாக நடக்கும். ஆனால் இந்த ஆண்டு பருவமழை பொய்த்து போனதால் 15 ஆயிரம் ஏக்கருக்கும் மேல் நெல் விவசாயம் பாதிக்கப்பட்டுள்ளது.

அய்யம்பாளையம் மருதாநதி அணை, ஆத்தூர் காமராஜர் அணைகளில் குறைந்த அளவே தண்ணீர் இருக்கிறது. இந்த தண்ணீர் குடிநீர் தேவைக்காக தேக்கி வைக்கப்பட்டுள்ளது. அதனால் இந்த தண்ணீரை கொண்டு விவசாயம் செய்ய முடியாத சூழ்நிலை ஏற்பட்டுள்ளது.

## விவசாயிகள் கண்ணீர்

வழக்கமாக இந்த பகுதிகளில் பயிர் செய்யப்பட்டு இருக்கும் நிலங்களில் இருந்து லட்சக்கணக்கான மூட்டை நெல் அறுவடை ஆகும். ஆனால் தற்போது பயிர்கள் காய்ந்து வருவதை பார்த்த விவசாயிகள் கண்ணீர் வடித்து வருகின்றனர். நவம்பர்

மாதம் பெய்த மழையை நம்பி தாமரைக்குளம் பகுதிகளில் 75 ஏக்கர் பரப்பளவில் நெல் சாகுபடி செய்யப்பட்டது. இதில் ஏக்கருக்கு ரூ.25 ஆயிரம் வரை செலவானது.

100 நாட்கள் விளையக்கூடிய நெல் பயிர் தற்போது 30 நாட்களை கடந்த நிலையில் காய தொடங்கி உள்ளது. இன்னும் 70 நாட்கள் வளர வேண்டிய பயிரை காப்பாற்ற விவசாயிகள் போராடி வருகின்றனர். மேலும் ஆழ்குழாய்களில் இருக்கும் கொஞ்சம் தண்ணீரையும் நெல்லுக்கு பயன்படுத்துகின்றனர். இந்த ஆண்டு மழை சரியாக பெய்திருந்தால், அறுவடை பணிகள் நடக்க வேண்டிய பகுதிகள் தற்போது வறண்டு காணப்படுகின்றன.

**வேளாண்மை துறை சார்பில் நிலக்கடலை சாகுபடி குறித்த பயிற்சி**



வேடசந்தூர்,

திண்டுக்கல் மாவட்டம் வேடசந்தூர் அருகே உள்ள தங்கச்சியம்மாபட்டியில் வேளாண்மைத்துறை அட்மா திட்டத்தின் கீழ் விவசாயிகளுக்கு நிலககடலை சாகுபடி பண்ணை அமைத்தல் குறித்த பயிற்சி நடந்தது. வேளாண்மை இணை இயககுநர் மனோகரன் தலைமை தாங்கி பயிற்சியை தொடங்கிவைத்து பேசினார். வேளாண்மை உதவி இயககுநர் சுருளியப்பன் முன்னிலை வகித்தார். அட்மா திட்ட தொழில்நுட்ப மேலாளர் ராஜேந்திரன் வரவேற்றுப்பேசினார்.

காந்திகிராமம் வேளாண் அறிவியல் மைய பேராசிரியர் உதயகுமார் நிலககடலை பயிரிடுவது பற்றிய தொழில் நுட்பம் குறித்து பேசினார்.உதவி வேளாண்மை அலுவலர் நாகராஜன் நிலககடலை விதைநேர்த்தி செய்முறை பற்றி விளக்கம் அளித்தார். இந் நிகழ்ச்சியில் பங்கேற்ற விவசாயிகளுககு இலவச இடுபொருட்கள் வழங்கப்பட்டது. இதற்கான ஏற்பாடுகளை தொழில் நுட்ப வல்லுநர்கள் ரமேஷ்குமார், சிவககுமார் ஆகியோர் செய்து இருந்தனர்.

**கரும்புடன் வந்து மனு அளித்த விவசாயிகள்**



தேனி,

ஆலை கரும்பிற்கு கொள்முதல் விலையைடன் ஒன்றுக்கு ரூ.3,750 ஆக உயர்த்த வேண்டும் என்று வலியுறுத்தி விவசாயிகள் கரும்புடன் வந்து மனு அளித்தனர்.

<u>கரும்பு விவசாயிகள்</u>

தேனி மாவட்டம், கீழக்கூடலூர் பகுதியை சேர்ந்த கரும்பு விவசாயிகள் சுமார் 30 பேர் தேனி மாவட்ட கலெக்டர் அலுவலகத்திற்கு நேற்று ஒரு வேனில் வந்தனர். வேனின் முகப்பில் ஆலை கரும்புகளை கட்டியபடி வந்தனர். வேனில் இருந்து இறங்கிய விவசாயிகள் தங்களது கைகளில் கரும்புகளுடன் கலெக்டர் அலுவலகத்தில் நடந்த மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டத்தில் மனு அளிக்க சென்றனர்.

அப்போது அங்கு பாதுகாப்பு பணியில் நின்ற போலீசார் விவசாயிகளிடம் விசாரணை நடத்தினர். மனு அளிக்க வந்த விவரத்தை தெரிவித்ததும், 7 விவசாயிகள் மட்டும் மக்கள் குறைதீர்க்கும் கூட்டம் நடந்த கூட்டரங்கிற்கு அனுமதிக்கப்பட்டனர். பின்னர் அந்த விவசாயிகள், கூட்டத்திற்கு தலைமை தாங்கி நடத்திய மாவட்ட வருவாய் அலுவலர் சோமுபாண்டியனிடம் கோரிக்கை மனு அளித்தனர்.

அந்த மனுவில் கூறப்பட்டு உள்ளதாவது:–

விலை நிர்ணயம்

கூடலூரில் கடந்த 10 ஆண்டுகளுக்கும் மேலாக 80 ஹெக்டேர் பரப்பளவில் ஆலை கரும்பு விவசாயம் செய்து வருகிறோம். ஆனாலும் எங்கள் வாழ்வில் எந்தவித முன்னேற்றமும் ஏற்படவில்லை. அரசு மானியத்துடன் கிடைக்கக் கூடிய உரம், பூச்சிக் கொல்லி மருந்துகள் சரிவர கிடைக்க வில்லை. மத்திய, மாநில அரசுகள் அறிவித்த விலை எங்களுக்கு கட்டுப்படியா காது. கடந்த 2012–13–ம் ஆண்டு ஆலை கரும்பு ஒரு டன்னுக்கு ரூ.2 ஆயிரத்து 350 கிடைத்தது. ஆனால் எங்களுக்கு ஒரு ஏக்கருக்கு மொத்தம் ரூ.1 லட்சத்து 4 ஆயிரத்து 300 செலவு ஆகிறது. ஒரு ஏக்கர் பரப்பளவில் எதிர்பார்க்கும் 30 டன் விளைச்சல் கூட கிடைப்பது இல்லை.

2013–14–ம் ஆண்டில் ஒரு டன் கரும்புக்கு ரூ.2 ஆயிரத்து 650 என விலை நிர்ணயம் செய்யப்பட்டு உள்ளது. இதன் படி பார்த்தால் ஒரு ஏக்கருக்கு ரூ.75 ஆயிரத்து 500 கிடைக்கும். இதன் மூலம் விவசாயிகளுக்கு ஒரு ஏக்கருக்கு ரூ.24 ஆயிரத்து 800 அளவில் நஷ்டம் ஏற்படும். எனவே அரசு அளிக்கும் உரம், பூச்சிக்கொல்லி மருந்துக்கான மானியம் கிடைக்கவும், மத்திய, மாநில அரசு நிர்ணயித்துள்ள கொள் முதல் விலையை ஒரு டன் ரூ.3 ஆயிரத்து 750 ஆக உயர்த்த வேண்டும். இவ்வாறு உயர்த்தினால் ஒரு ஏக்கருக்கு மிகக் குறைந்த அளவில் ரூ.8 ஆயிரத்து 200 அளவில் லாபம் கிடைக்கும்.

இவ்வாறு அந்த மனுவில் கூறப்பட்டு உள்ளது.

**குமரி மாவட்டத்தில் மரவள்ளிக்கிழங்கு விலை உயர்வு**


கருங்கல், - குமரி மாவட்டத்தில் மரவள்ளிக்கிழங்கின் விலை கடுமையாக உயர்ந்து வருகிறது. முக்கிய உணவு பயிர்

குமரி மாவட்டத்தில் மரவள்ளிக்கிழங்கு முக்கிய உணவு பயிராக உள்ளது. இதை 'மரச்சீனி கிழங்கு' என்றும் அழைப்பார்கள். ஒரு காலத்தில் ஏழைகளின் உயிரை பாதுகாத்து வந்த உணவாக மரவள்ளிக்கிழங்கு விளங்கியது. உணவு பஞ்சம் ஏற்பட்ட காலக்கட்டத்தில் வசதி படைத்தவர்கள் அரிசி உணவு வகைகள் உண்டு வந்தபோது, ஏழைகள் மரவள்ளிக்கிழங்கை உண்டு உயிர் வாழ்ந்தார்கள்.

இந்த கிழங்கு விளவங்கோடு மற்றும் கல்குளம் தாலுகாவில் அதிகம் காணப்பட்டது. இந்த கிழங்கை ஏப்ரல் அல்லது மே மாதம் பயிரிட்டால், மார்ச் அல்லது ஏப்ரல் மாதத்தில் முழுமையாக பலன் கொடுத்து விடும். முன்பு இந்த பயிரை ஏராளமான விவசாயிகள், தொழிலாளர்கள் நம்பி இருந்தனர்.

விலை உயர்வு

தற்போது, மரவள்ளி கிழங்கு பயிர் விளைந்த இடங்கள் எல்லாம் வீட்டு மனை களாகவும், ரப்பர் தோட்டங்களாகவும் மாறிவிட்டன. இதனால், சந்தைகளில் மரவள்ளிக்கிழங்கு வரத்து குறைந்துள்ளது.

தற்போது, ஒரு கிலோ கிழங்கின் விலை ரூ. 25 வரை விற்பனை செய்யப்படுகிறது. தற்போதைய சிறுவர்கள் இதை சாப்பிட அதிக விருப்பம் கொள்வதில்லை. வயதான முதியவர்கள் தான் ஆசைப்பட்டு அதிக விலை கொடுத்து வாங்கி செல்கிறார்கள். மரவள்ளிக் கிழங்கின் விலையேற்றத்தால், இதை பயிரிட்ட விவசாயிகளுக்கு ஓரளவு லாபம் கிடைத்து வருகிறது.

**இன்றைய வேளாண் செய்திகள்**

### தேசிய பயிர் காப்பீட்டு திட்டம்: பிரதமருக்கு ஜெயலலிதா கடிதம்



மத்திய அரசின் திருத்தப்பட்ட தேசிய பயிர் காப்பீட்டு திட்டத்தில், விவசாயிகள் செலுத்தவேண்டிய பங்குத்தொகை 2 சதவீதத்துக்கும் மேல் அதிகரித்துள்ளது. எனவே, அந்தத் தொகையில் 2 சதவீதத்துக்கு மேல் உள்ள கூடுதல் தொகையை மத்திய, மாநில அரசுகள் சரிசமமாக பங்கிட்டு செலுத்தலாம் என்று பிரமருக்கு, முதல்வர் ஜெயலலிதா கோரிக்கை விடுத்துள்ளார்.

இது தொடர்பாக பிரதமர் மன் மோகன் சிங்குக்கு திங்கள்கிழமை அவர் எழுதிய கடிதத்தில் கூறப் பட்டுள்ளதாவது:

தேசிய பயிர் காப்பீட்டு திட்டத்தை, திடீரென மாற்றிவிட்டு, திருத்தப்பட்ட தேசிய பயிர் காப்பீடு திட்டத்தினை இந்நிதியாண்டில் மத்திய அரசு அறிமுகப்படுத்தி யிருக்கிறது.

விவசாயிகளுக்கு அதிர்ச்சி

விவசாயிகளை கலந்தாலோசிக் காமலேயே இந்த முடிவினை மத்திய அரசு எடுத்திருப்பது அவர்களுக்கு பெரும் அதிர்ச்சி அளித்துள்ளது. குறிப்பாக, தமிழக

விவசாயிகள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர். தமிழகத்தில் விவசாயிகளின் காப்பீட்டு பிரீமியத் தொகையில் 45 முதல் 50 சதவீதத்தை மாநில அரசு செலுத்துகிறது. கடந்த 2000-01ல் பயிர் காப்பீடு திட்டத்தில் சேர்ந்த விவ சாயிகளின் எண்ணிக்கை 1.01 லட்சமாக இருந்தது. மாநில அரசின் முயற்சியால் 2012-13ம் ஆண்டில் இது 9.76 லட்சமாக அதிகரித்துள்ளது.

இந்த சூழலில், புதிய தேசிய பயிர் காப்பீடு திட்டத்தை நவம்பர் 1-ம் தேதி முதல் அலம்படுத்துவதற்கு மத்திய அரசு உத்தரவினை பிறப்பித்து நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது. ரபி பருவம் துவங்கி, ஒரு மாதத்துக்குப் பின் இத்திட்டம் அறிவிக்கப்பட்டுள்ளது. இதன் மூலம் விவசாயிகளுக்கான பிரீமியம் தொகை பன்மடங்கு அதிகரித்துள்ளது. மாநில அரசு தற்போது 50 சதவீத சந்தாவை அளிப்பதால், விவசாயிகள் வெறும் 1 முதல் 1.75 சதவீத தொகையை மட்டுமே செலுத்துகின்றனர். ஆனால், புதிய பயிர் காப்பீடு திட்டத்தின் கீழ், விவசாய காப்பீடு பிரீமியம் 3.75 சதவீதத்துக்கு அதிகமாகவும், பருவமழை அடிப்படையிலான பயிர் காப்பீடு பிரீமியம் 4.8 சதவீதத்துக்கு அதிகமாகவும் அதிகரிக்கப்பட்டுள்ளது. இதனால், விவசாயிகள் தங்கள் பயிருக்கு காப்பீடு செய்ய முன் வருவார்களா என்பது உறுதி இல்லை.

தமிழகத்தில் 2012-13ம் ஆண்டில் ஏற்பட்ட வறட்சி காரணமாகவும், வடகிழக்கு பருவ மழை குறைந்த தாலும் விவசாயிகள் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளனர். இந்த சூழலில், பிரீமியம் தொகை அதிகரித்தால் அவர்களுக்கு பெரும் பாரமாக ஆகிவிடும். எனவே, பிரீமியம் தொகையில் 2 சதவீதத்துக்கு மேல் உள்ள கூடுதல் தொகையை மத்திய, மாநில அரசுகள் சரிசமமாக பங்கிட்டு செலுத்தலாம் .

இதன்காரணமாக, பயிர் காப்பீடு திட்டம் தொடர்ந்து நீண்ட காலத்துக்கு செயல்படும் நிலை உருவாகும். எனவே, இந்த விஷயத்தில் உடனடியாக தாங்கள் தலையிட்டு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

இவ்வாறு முதல்வர் ஜெய லலிதா எழுதிய கடிதத்தில் கூறப் பட்டுள்ளது.

## காவிரி தீர்ப்பாயத் தலைவர் நியமனம்: விவசாயிகள் மகிழ்ச்சி



காவிரி நதிநீர் பங்கீட்டு தீர்ப்பாயத்தின் தலைவராக உச்சநீதிமன்ற நீதிபதி சவுகான் நியமிக்கப்பட்டுள்ளதற்கு காவிரி டெல்டா விவசாயிகள் மகிழ்ச்சி தெரிவித்துள்ளனர்.

இதுகுறித்து காவிரி டெல்டா விவசாயிகள் நலச்சங்கம் செயலாளர் ரங்கநாதன் கூறுகையில், "உச்ச நீதிமன்ற நீதிபதி சதாசிவம் காவிரி தீர்ப்பாயத்தின் தலைவராக நீதிபதி சவுகான் பெயரை பரிந்துரைத்துள்ளதையடுத்து, தீர்ப்பாயத்தின் தலைவராக அவர் நியமிக்கப்பட்டுள்ளார். வரும் ஜூன் மாதம் நீதிபதி பதவியிலிருந்து சவுகான் ஓய்வுபெறுகிறார். அதனையடுத்து, அவர் தீர்ப்பாயத் தலைவராக பொறுப்பேற்பார். புதிதாக பதவியேற்கும் சவுகான் கடந்த 2007- ஆம் ஆண்டு காவிரி நதிநீர் பங்கீட்டு தீர்ப்பாயத்தின் இறுதி தீர்ப்பு குறித்து தமிழகம், கர்நாடகம் மற்றும் மத்திய அரசு தாக்கல் செய்த மனுக்கள் மீது விசாரணை நடத்துவார்," என்று தெரிவித்தார். இதற்குமுன், இத்தீர்ப்பாயத்தின் தலைவராக இருந்த என். பி. சிங் உடல் நலம் காரணமாக கடந்த 2012 -ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் பதவி விலகினார். அதன்பின்னர், இப்பதவிக்கு யாரும் நியமிக்கப்படாமல் இருந்த நிலையில், நீதிபதி சவுகான் பதவியேற்கவுள்ளார்.

## நீர்நிலை கபளீகரம்: கவலையில் விவசாயிகள்!

கோவை எட்டிமடை அருகே குட்டையை தூர்வாரி விவசாயத்திற்கு வண்டல் மண் எடுக்கிறோம் என்ற பெயரில், அனுமதியை மீறி, கிராவல் மண் வியாபாரம் நடந்து வருகிறது. அனுமதிக்கப்பட்ட காலம் முடிந்தும் அதிகாரிகள் அதை கண்டுகொள்ளாமல் உள்ளனர்.

கோவை மாவட்டம், தெற்கு வட்டம், மதுக்கரையை அடுத்துள்ளது எட்டிமடை பேரூராட்சி. இந்த பேரூராட்சிக்கு உட்பட்ட சி.க.புதூர் உப்புக்கண்டி என்ற பகுதியில் அரசு புறம்போக்கு நிலத்தில் 2 ஏக்கர் 30 சென்ட் அளவில் குட்டை உள்ளது. சுமார் 3 கி.மீ., தொலைவில் உள்ள மலையில் இருந்து வரும் நீர், இக்குட்டையில் தேங்கி அங்கிருந்து வாளையாறு அணைக்குச் செல்கிறது. முழுவதும் விவசாயம் சார்ந்த அப் பகுதியில் இந்த குட்டை முக்கியமான நீர் நிலையாகவும், மழைக்காலத்தில் காட்டாற்று வெள்ளத்திற்கு சரியான வழித்தடமாகவும் இருந்து வந்தது.  கடந்த சில வருடங்களாக தூர்வாரப்படாமல் இருந்த இந்தக் குட்டையில் 4 அடுக்குகளில் வண்டல் மண் தேக்கமடைந்துள்ளது.

இது குறித்து கிராம மக்கள் பொதுப்பணித்துறையினரிடம் மனு அளித்து, பின்னர் தூர்வாரும் பணியும் துவங்கியுள்ளது. இதனிடையே இப்பகுதியில் உள்ள சிலர், தூர்வாரிய வண்டல் மணலை கரை பலப்படுத்தியது போக, மிச்சம் மீதியை விவசாய நிலங்களுக்கு பயன்படுத்திக் கொள்ள பொதுப்பணித்துறையிடம் அனுமதி கேட்டுள்ளனர்.

விவசாயத்திற்குத் தானே கேட்கிறார்கள் என பொதுப்பணித்துறையினரும் கடந்த டிசம்பர் மாதம் அனுமதி அளித்துள்ளனர். மேற்கொண்டு காலநீடிப்பும் வழங்கப்பட்டுள்ளது. தற்போது அந்த காலநீடிப்பு அனுமதியும் முடிந்து, ஒரு மாதம் ஆகப் போகிறது. ஆனால், இன்னமும் தோண்டிக் கொண்டே இருக்கிறார்கள். 2 அடியுள்ள வண்டல் மண்ணை எடுப்பதாகக் கூறி, 20 அடியை தாண்டி குவாரி போல தோண்டிவிட்டனர் என்கின்றனர் அப்பகுதி விவசாயிகள்.

**மணல் விற்பனை படுஜோர்**

அவர்கள் கூறுகையில், பொதுப்பணித்துறை அளித்த அனுமதியில் குட்டையிலிருந்து 30 மீட்டருக்கு அப்பால் வண்டல் மண் எடுக்க வேண்டும், கரைகளுக்கு சேதம் ஏற்படக் கூடாது. அந்த மண்ணை விவசாயத்திற்கு மட்டுமே பயன்படுத்த வேண்டும் என 8 நிபந்தனைகள் உள்ளன. ஆனால், தற்போது குட்டை இருந்த இடமே தெரியாத வகையில் மணல் குவாரி அமைத்து,

படுஜோரான விற்பனையும் நடந்து வருகிறது. ரியல் எஸ்டேட்டுகளில் சாலை அமைக்கவும், கட்டுமானப் பணிகளுக்கு இந்த கிராவல் மணல் ஏற்றது என்பதால், பாதி விலைக்கு விற்கப்படுகிறது. இது குறித்து ஆட்சியரிடம் புகார் மனு அளித்தோம். உடனே பகலில் விடுத்து, இரவில் மணல் கடத்தல் ஆரம்பமாகிவிட்டது என்கின்றனர்.

**புகார் வந்தால் நடவடிக்கை**

சுமார் 2 அடிக்கு வண்டல் மண் எடுக்க கொடுக்கப்பட்ட 15 நாள் அவகாசம் டிச.23ம் தேதியே முடிந்துவிட்டது. ஆனாலும் மணல் எடுக்கிறார்களே என மதுக்கரை வருவாய் ஆய்வாளர் ராஜ்குமாரிடம் கேட்டபோது, ஆட்சியருக்கு கொடுத்த புகார், எனக்கு வந்தால் மட்டுமே நடவடிக்கை எடுக்க முடியும். தன்னிச்சையாக அங்கு போய் விதிமுறை மீறல் குறித்து கேள்வி கேட்க முடியாது என்றார்.

**சட்டப்படி குற்றம்**

கோவை தெற்கு தாசில்தார் கூறுகையில், விதிமுறைகள் மீறப்பட்டால் அது சட்டப்படி குற்றம் தான். விவசாயிகளின் புகார் குறித்து ஆய்வு செய்யப்படும் என்றார். அனுமதி கொடுப்பதுடன் அதிகாரிகளின் பணி முடிந்துவிடாது. அதை கண்காணிக்கவும் வேண்டும். ஆட்சியருக்கு கொடுத்த மனுவுக்கும் பதில் இல்லை. அதிகாரிகளும் கவனிப்பதில்லை. இருந்த ஒரே ஒரு நீர்நிலையும் கபளீகரம் செய்யப்பட்டுவிட்டது என வேதனையில் புலம்புகின்றனர் விவசாயிகள்.

சமீபத்தில் கோவை குறிச்சி குளத்தில் தூர்வாருகிறோம் என்ற பெயரில், கிராவல் மண் கொள்ளை கண்டுபிடிக்கப்பட்டு நடவடிக்கை எடுக்கப்பட்டது குறிப்பிடத்தக்கது.